உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.

சென்னைத் திருமயிலை
ஸ்ரீ கபாலீஸ்வரரின்

சிவஞானவிபுத்வவிபுலம்.

இஃது
சிவநேசச்செல்வர்கள் விருப்பத்தின்படி
ஸ்ரீ சிவசமயாத்திற்குத் தொண்டுபூண்டொழுகும்
அடியார்களில் ஒருவரும்
வேதாந்த சித்தாந்த சமரச சுக்ஞான விலாச
சபாப்ரசங்க கோளரியும்
சென்னைத் திருமயிலை வடகூர் இராயப்பேட்டை
அருட்கவி
கி. ஊ. பா. சங்காதர நாவலரென்றியற்பெயரமைந்துள்ள
"சிவஞானப் பரதேசியாரென்னும்"
சிவப்ரகாச தேசிக சுவாமிகளால்
இயற்றப்பட்டு

—:—

கையொப்பக்காரர்களின் நன்முயற்சியினால்
தமது
சென்னை சேத்துப்பேடு
ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாச் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

42 - வது ஷ்த்தின் திருப்பணியாக கலியுகாப்தம் 5023 க்குச்
சரியான துன்மதி ஷ பங்குனி மீ 27 உ
சுவாமி சந்நிதியில் தேசிக சுவாமிகளால்
அரங்கேற்றஞ்செய்யப்பட்டது.

—(✱)—

1922 ஷ ஏப்ரல் மீ 9 உ

1
22 JUL 1922
23:38.2111
N22
149444

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.

சென்னைத் திருமயிலை
ஸ்ரீ கபாலீஸ்வரரின்

சிவஞானவிபுத்வவிபுலம்.

22 JUL 1922
359 III 1922
294 I. 5
870

இஃது
சிவநேசச்செல்வர்கள் விருப்பத்தின்படி
ஸ்ரீ சிவசமயத்திற்குத் தொண்டுபூண்டொழுகும்
அடியார்களில் ஒருவரும்
வேதாந்த சித்தாந்த சமரச சுக்ஞான விலாச
சபாப்ரசங்க கோளரியும்
சென்னைத் திருமயிலை வடகூர் இராயப்பேட்டை
அருட்கவி
கி. ஊ. பா. கங்காதர நாவலரென்றியற்பெயரமைந்துள்ள
" சிவஞானப் பரதேசியாரென்னும் "
சிவப்ரகாச தேசிக சுவாமிகளால்
இயற்றப்பட்டு

—※—

கையொப்பக்காரர்களின் நன்முயற்சியினால்
தமது
சென்னை சேத்துப்பேடு
ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாச் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

42 - வது ஷூத்தின் திருப்பணியாக கலியுகாப்தம் 5023 க்குச்
சரியான துன்மதி ஷூ பங்குனி மீ 27 உ
சுவாமி சந்நிதியில் தேசிக சுவாமிகளால்
அரங்கேற்றஞ்செய்யப்பட்டது.

—(✽)—

1922 ஷூ ஏப்ரல் மீ 9 உ

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

—(*)—

சென்னைத் திருமயிலை

ஸ்ரீ கபாலீஸ்வரரின்

சிவஞானவிபுத்வவிபுலம்.

விநாயகர் வணக்கம் – திருப்பதிகம்,

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

மூலமும், வியாத்தியுரையும்.

தெய்வ யிலக்கணம்.

அருள்வடிவே! பரம்பொருளே வமலகுண மதனிலமர்ந் தாளுகின்றப்
பெருந்தகையே! பெம்மானே பிரணவபஞ் சாக்கரத்தைப் பேசி ஞான்று
வருந்திதொழு மடியர்க்கெழி டரவரும் விநாயகனே மயிலை யீசன்
கருணைபெற துதிமாலை சாற்றநின் விழிசாய்த்தாட் காப்பு தானே.

(இதன் வியாத்தியுரை.) எல்லாமாய், எப்பொருளாய், எவை விளங்குகின்றனவோ அவைகளுக்கெல்லாம் அவ்வவ்வமயங்கடோறும் வேண்டுவன வரையாது கொடுத்து ஆதரித்திராநின்ற திருவுருவமே! கடவுளிலக்கணத்திற்குரிய வத்துவே! ஆசாபாசமெனத் தலையெடுத்தாடி வகங்கரித்து சன்மார்க்க பத்தியையழிக்க பலசன்ம பங்காளியாக வாட்சிபெற்று நிலைத்துள்ள கன்மங்களற்ற சுத்தசிந்தையிற்றங்கி (அகண்ட பரிபூரண தற்சொருப காட்சிநல்கி) காக்கின்ற பேரானத்தன்மையே! பெரியானே!

பெருமையானே (மஹாமந்திரமாகிய ஐந்தெழுத்தை சிவகணேசவெனலும் சிவயநம வெனலும் நமசிவய மெனலும்) ஆகிய இவற்றிலொன்றை எவ்வவதரத்தும் மறவாது சதாசொல்லி, திருவருட் கிடைக்கும்படி மனங்கசிந்து கெஞ்சி வணங்குகின்ற மெய்யன்பர்க்கு நன்மைதரயெழுந்தருளும் விநாயகக் கடவுளே! உமாதேவியெனு மென தன்னையார் பரமசிவமாகிய மஹாதேவன் உபதேசத்திலே, எண்ணமானது நிலைக்காது அவ்வமயத்தில் கண்முன் புலப்பட்ட கேதாரமாகிய மயில்வடிவத்தை யிச்சித்தபடி, அம்மயிலுருவத்தையடைந்து பூசித்த திருமயிலாப்பூரில், இனிது விளங்கும் ஸ்ரீ கபாலீச்சுரனின் கிருபையைப்பெற தோத்திரமாகிய மாலையை யெடுத்துரைக்க நினது கண்பார்த்து காக்கவேண்டும் என்பதாம். (க)

—§—

வைராக்கிய விலக்கணம்.

தந்தைசெய்தப் பூசைதனை யொருசிறிது மறியாதத் தநய னுண
பந்தமிலாச் சிறுவனெனு நம்பியார்ப் பணிபுரியப் பக ரொணுத
விந்தைமிகக் கனியுண்டு வேண்டகலை தந்த விநாயகனே கைலை
யந்தமிகு மயிலையீசன் றுதிசாற்றவருடருக வர்ச்சித்தேனே.

—§—

(இதன் வியாத்தியுரை) பூர்வசனனப் புண்ணியவசத்தின்படி (எடுத்த பிறவிக்கு நற்பயனையடைவதே எத்தவத்துஞ் சிறந்ததென மேதாவியர்களா லெடுத்தாளப்பட்ட அருண்மொழிக்கியாதாமொரு பேதஞ் சிறிதுமில்லாதனவாய்) சதா பூசித்துவந்த தகப்பன் பூசையை இதற்குமுன் கண்டும் பழகியுமிராத குற்றமற்ற சிறுவனுகிய நம்பியார் நடத்தலும் அப்பூசையை யேற்றுக்கொண்டதற்கடையாளமாகப் படைக்கப்பட்ட கனிவர்க்கத்தி லொன்றேனுஞ் சாப்பிடாதிருத்தலாலும், பள்ளிச்சாலைக்குப் போகவேண்டிய காலஞ்சமீபித்தலாலும், தன் தகப்பன்படைக்க சுவாமி சாப்பிட்டதாக யெண்ணிய நம்பியார் அவ்வமயஞ் சாப்பிடாதிருத்தற் சரியன்றெனவும், அவை தடைப்படுதலாற் றனது தலையைக் கல்லிற்புடைக்க ஆரம்பித்தபோழ்து அன்னவன் மனங்களிப்படைவானுன்னி, மெதுவாகத் தும்பிக்கையைநீட்டி கனியிலொன்றை யெடுத்துச் சாப்பிடக்கண்டு அளவளாவிய ஆசைமேலிட்டவனுய் எஞ்சியிருந்தவற்றைத் தானுஞ் சாப்பிட்டு கல்விக்கழகத்திற்குப் போகவேண்டிய நேரமதிகரித்தலாற் பயந்து: வேண்டிய அச்சிறுவனின்மேற்றயைபாலித்து சகலகல்வியுமோதிவைத்த போல்லாப் பிள்ளையாரென்னும் விநாயகக் கடவுளே! அழகுநிறைந்த கயிலாயமென்னுந் திருமயிலை ஸ்ரீகபாலீச்சுரன் தோத்திரமாலையை யுரைக்க கிருபை பாலித்தருள நமஸ்கரித்தேன் என்பதாம். (உ)

தோற்றயிலக்கணம்.

பாரனைத்தும் பணிபுரிய வருட்சுரந்த வைங்கரனே பாடி போற்று
நாரதனின் சிந்தைபடி சனகமன்னன் முனந்தோன்றி நன்மை வீற
சீரளித்து போதித்தவி நாயகனே திருமயிலை ! சிவ பிரானின்
பூரணபூங் கழன்மீது துதிசாற்ற வருடருகப் போற்றி னேனே.

(இதன் வியாத்தியுரை) எல்லாவுலகங்களும் சதா வந்தனை வழிபாடுடன் தொண்டு (அடிமைவேலை) செய்யும்படியாக அநுக்ரஹித்த ஐந்துக் கையையுடையவனே ! (சிருஷ்டி, திதி, சம்ஹாரம், திரோபவம், அநுக்ரஹம்) எனும் பஞ்சக் கிரியைகளையும் நடத்துபவனே ! பாடுகின்ற பனுவலோர்கள் தேடுகின்ற செல்வமே; எனுந் திருவாக்கிற்கு சான்றாக சதா பெரும்புகழை மறவாது பாடி வணங்கிய நாரதமுனிவரின் மனத்தாங்கலையகற்றவும், அம்முனிவரின் விருப்பத்தை நிறைவேற்றவும், (பசியெனும் பாசையாற் சருவமும் மூடப்பட் டதனிடத்தே அதிக பற்றுக்கோடுடையனவாகப் பசுக்களாகிய வான்மாக்கட் கட்டுப்பட்டிருக்கின்றவுண்மையை நிலைநிறுத்துவான்வேண்டி; தொழுநோயுடையவராக வெழுந்தருளி சருவமுந் தனக்குளொடுக்கமென்பதை யுரைத்த (சனகனாகிய மன்னவன்முன்) அவண்படைக்கப்பட்ட யாவற்று மாய்கையாகமறையவும், பசியடங்க சாதமளிக்கமுடியவில்லையென அவ்வரசனைக் கடிந்துநீங்கி; (கொடிது கொடிது வறுமைக் கொடிது) என்பதனுபவத்திற் சிறக்க வவணிருந்த திரிசிரனென்னும் பிராமணனால் கொடுக்கப்பட்ட (அறுகினைப்பொசித்து) அன்னவனுடையக் குடிசை வீடானது, அரசனாகிய சனகன் மாளிகைக்கு மேலானதாக வுண்டுசெய்துள்ளதை அம்மன்னவன் றெரிந்து வணங்கி கெஞ்சியவைக்கிணங்கி சிவபோத ஞானமுணர்த்திய சிந்தாமணி விநாயகனே ! திருமயிலை ஸ்ரீசிவபெருமானி னருணிறைந்து விளங்காநின்ற மலரடியின்மேல் தோத்திரமாலை சொல்வதற்கு அருட்சுரந்தருள நமஸ்கரித்தேன் என்பதாம். (௫)

———※———

மாயவிலக்கணம்.

அத்தனுட னம்மைசிவ காமிநைமி மடமதனி லமைந்து வுற்ற
சித்திரத்தைக் கண்டபடி வுருகரந்து தேவரெலாஞ் சிந்தை நொந்த
வத்தருண மசுரனிடுக் கணைத்தடுத்த கயமுகனே ! அன்ப ரேத்து
வித்தக கபாலீசன் றதிமாலைக் கணிக்கருட்செய் வேண்டினேனே.

(இதன் வியாத்தியுரை) மரகத மஹாமுனிவன் தபசுநிலைக்கெட்டவண்கண்முன் தோன்றிய மாய்யானையாலுற்பவித்த வசுரனால் அவ்வமயமேற்பட்ட பெருந்தொந்தரவைத் தாங்கமுடியாது மிகவும் மனம்வருந்திய

தேவர்களைக் காக்க பரமசிவன், சிவகாமியம்மையோடு (நைமியென்பாருடைய மடத்திற்கெழுந்தருளியகாலத்து; அம்மண்டபத்திலெழுதியிருந்த யானைவுருவத்தைப் பார்த்த பார்வையினாலச்சித்திரமானது உண்மையிலே உயிர்பெற்றுவந்து உத்தரவின்படி, ஆனைமுகத்தை யுடையவனாகிய அவ்வசுரனின் வல்லமைகளை ஒடுக்கிய முடிவில் மூஷிகமாகவரலும், அத்தருணம் (ஓம் கணேசாவென) அவ்வசுரனாகிய மூஷிகன்சொல்லி வணங்கிய தற்கிதக்கி அவன்மேலாரோகணித்த கயமுகனே! அடியார் சதாவணங்கா நின்ற ஞானக் கபாலீசன் தோத்திரமாலையை நியமித்தருளும்படி தயை பாலித்தருள சரணஞ்செய்தேன் என்பதாம். (சு)

——)§(——

கன்மயிலக்கணம்.

வாமனனாகவேமாயன் மாவலியை மூன்றடி மண்ணை தானந்
தாமனுகிகேட்டதற் கிசைந்துகொடுத் திடபொறுக்காத் தன்மையாலே
யீமகரு வண்டாகிக் கண்ணிழந்த சுக்கிரன்றொழு மீசன்றன்மேற்
பாமாலை சொல்வதற்கு கருணையது செயவேணடும் பணிந்திட்டேனே.

(இதன் வியாத்தியுரை.) பிரம விஷ்ணுயிருவராற் கண்டடையப் படாது வளர்ந்துநின்ற திருவண்ணாமலையார் ஆலய விளக்கொளி மங்கலாயெரிந்ததை, விளங்கச்செய்ததின் பெரும்பயனால் அரசனாகப்பிறந்துள்ள மாபலி சக்கிரவர்த்தியினிடம்; விட்ணு, வாமனாவதாரமாக யெழுந்தருளி மூன்றடிமண் தானங்கேட்க அவ்வரசனுஞ் சம்மதமுடையவனாகக்கொடுக்க எள்ளுடன் சலம் வார்த்தபோது அச்செயலிற் சற்றும் மனம் பொறுக்காதவனும், குருவாகவும் விளங்கியுள்ள சுக்கிரபகவான் கருவண்டாகி; சலம் வரும் கரகச்செம்பின் மூக்கின் துவாரத்தை யடைத்துக்கொள்ளலும், அதையறிந்த வாமனவிஷ்ணு தர்ப்பையினால் அவ்வண்டாகிய சுக்கிரன் கண்ணைக் குத்தினதால் கண்ணிழந்து *சுக்கிரனால் திருக்குளமெடுத்து லிங்கமமைத்து வணங்கி இழந்தக் கண்ணைப்பெற்று துதிசெய்யப்பெற்ற ஈச்சுரன்மேல் பண்மாலையாணதை இயம்புவதற்கு கிருபை செயவேண்டும் நமஸ்கரித்தேன் என்பதாம். (ரு)

* சுக்கிரலிங்கம் சுக்கிரதீர்த்தம் சுக்கிரபுரி என வழங்கப்படுகிறது.

——§——

செயற்படுவிலக்கணம்.

வேதமதை யசுரனவன் களவாடி புணரியினில் விடுத்த நாளில்
ஏதமற கண்ணனெனு மாயவனும் மச்சவுரு வெடுத்து வந்த
நீதமுடன் போற்றிசெய்த திருமயிலை! யண்ணலி னெடும் பதமேற்
காதன்மிகு துதிமாலைச் சொலவருட்கணேசுரன்றட் கருதினேனே.

(இதன் வியாத்தியுரை) அசுரனாற் களவுசெய்து சமுத்திரத்தி லெறிந்துள்ள வேதத்தை யெடுத்துதவும்பொருட்டு, கபடநாடக சூத்திராவதாரியாகிய விஷ்ணுவானவர் (மச்சாவதாரமெடுத்து) அவ்வேதத்தை யநுக்ரஹித்த அம்மீன் வடிவமானது நீங்கும்படியாக அன்னவரால் வணங்கப்பெற்ற திருமயிலாப்பூர் கடவுளின், நெடியத் திருவடிமேல் அபிலாசையோடு தோத்திர மாலைச் சொல்வதற்கு கணேச்சுரனின் திருவடியை நினைந்திட்டேனே என்பதாம். (சு)

இவை மீனேஸ்வரன் மீனும்பாள் மீனம்பதி எனவுடைத்து.

பூசையிலக்கணம்.

சிவபூசை யதற்கிடுக்க ணதைச்செய்து தனதருமைச் செல்வன் றன்னை
யவமதித்து யேசிபலத் துயர்ப்படுத்தி மரத்திற்கட்டி யடித்தவன்றேன்
கவலையுற வுருவிழந்து பிணியடைய வருளிய கணேசா! மைலை
நவமிகு மண்ணலின் றுதியா மாலைசொலற் கருட்புரிய நாடினேனே.

(இதன் வியாத்தியுரை) கல்யாணனென்பான் றனதருமந்தக் குமாரனுகிய வல்லாளனென்னுஞ் சிறுவன், மணலால் இலிங்கமமைத்து காட்டிலுள்ள பசுக்களின் பாலினுல் அபிஷேகஞ்செய்து, பூச்சாத்தி, தனையொத்த சிறுவர்களோடுசெய்திருந்த சிவபூசையைக் கண்ணினுற்பார்த்து தெய்வ சிந்தனையென்பது; கிஞ்சித்துமில்லாத கடுஞ்சினமுடையவனுகி பூசாதிரவியங்களைக் காலினுலுதைத்துத் தரையிற் சிதறச்செய்தும், தன்னுடைய அருமைக் குமாரனென்றும் நினையாது மரத்திற்கட்டியடித்தும், வாயில் வந்தபடி பலவித யிடும்பான வார்த்தைகளினுல் வைதும், துன்பத்தை விளைவித்த கல்யாணன் (கண்ணிருந்துங் குருடு, காதிருந்துஞ் செவிடு, வாயிருந்தும் ஊமை, காலிருந்தும் நொண்டி, கையிருந்தும் மொண்டி,) என்பதையொப்ப உருவிழந்து ஆற்றொணு நோயையடைந்து வாதைப்படும்படி சிறுவனுகிய வல்லாளனுக்காக மறையவனுக வடிவங்கொண்டெழுந்தருளி, தந்தைக்கு கன்ம வினையைக்கொடுத்தும், சிறுவனுக்கு வேண்டிய வரங்களளித்து அவன் கேட்டுக்கொண்டபடி வல்லாளக் கணபதி என்றப் பெயருடன் விளங்கும் விநாயகனே! திருமயிலைக் கடவுள்மீது தோத்திரமாலை சொல்வதற்கு கருணைசெய்யும்படி அண்டினேன் என்பதாம். (எ)

——)§(——

கபாலமேந்தியவிலக்கணம்.

ஐந்துசிர மிருப்பதனு டனக்குசம மாணுக வவ மதித்து
பந்தமுற் றகங்கரித்த பிரமனின் கபாலமொன்றைப் பரிந்து கிள்ளி

யெந்தவித மெனினுலல மடையாமற் செய்துகையி லேந்தி நின்ற
சுந்தரஞ்சேர் மயிலையண்ண டுதிசொல விநாயகன்றடுதிசெய் தேனே

(இதன் வியாத்தியுரை) ஆயனுகிய பிர்மாவிற்கு ஐந்துதலையிருந்தத ஞலும், பரமசிவனுச்கும் ஐந்துதலை யிருந்ததனுலும், தனக்கு ஈச்சுரன் சமமானவரென்றெண்ணி மமதையிற் கிடந்ததைத் தெரிந்த வவதாரத்து; அன்னவனுகிய பிர்மாவின் தலையிலொன்றையீச்சுரன் அறுத்து அவை யடையாளமாகத் தெரிய கையிலேந்தியபடியால் கபாலீச்சுரன் எனப் பெயர்பெற்ற திருமயிலைக் கடவுளின் மாலை சொல்வதற்கு விநாயகனின் திருவடியை வணங்கினேன் என்பதாம். (அ)

கடவுளுக்கு பஞ்சகிர்த்தியமே தலையெனப்படும் (தத்துவஞானர்த்தம்.)

——)§(——

திருத்தொண்டரிலக்கணம்.

பூசைசெபம் மந்திரங்க ளநுட்டான மிவையனைத்தும் பொருந்த நின்று
ஆசையெலாஞ் சிவநெறியே யடியவரே சிவமாக யகங் கணித்து
பாசமற்ற திருத்தொண்டர் வாழ்த்தநின்ற யீசனின் பாமாலைக்கு
தேசுயரு விக்ன விநாயகனே நினருடருக சேவித்தேனே.

(இதன் வியாத்தியுரை) அறுகாலபூசை, (மாங்கனியாசம், அங்கனி யாசம்) இவை முதலாய (செபம், ஏகாட்சரம், பஞ்சாட்சரம், சடாட்சரமந் திராட்சரங்கள், ஆசாரம், அனுட்டானம், நிலைக்கப்பெற்று, உள்ளம் பூரித்து யேற்படுகின்ற ஆசையென்னும் அன்பெல்லாம் சிவத்தோடுகலந்து இரண்டற்று வாழும்படியான நெறியாகவும், திருநீறு உருத்ராக்கம் முத லிய திருமேனியுடையாராகிய அடியார்கள் யாவரென்கினும் சிவபெருமா ஞகவெண்ணி யானந்தித்து, ஆசாபாசமெனும் அகப்பற்று, புறப்பற்று, என்பவைகளில்லாது ஏகமனமாக எல்லாஞ் சிவமாக நினைந்துள்ள திருத் தொண்டர்களாகிய அறுபத்துமூன்று நாயன்மார்கள் அருகேயிருந்து சதாவாழ்த்துகின்ற கபாலீச்சுரனின் பாமாலைக்கு விக்கினங்களை நீக்கி யாதரிக்கும் விநாயகப்பெருமானே! சுயம்பிரகாசமுடைய உமது அரு ளனுங் கருணையைத் தருகும்படியாக வணங்கினேனே என்பதாம் (க)

——§——

சிறப்பிலக்கணம்.

தானதவஞ் செய்தபடி சன்மதன்ம மனுபவித்தற் சாட்சியம் போல்
வானவருந் தானவரு வேண்டுவபோற் பலபலவாய் வடிவ மெல்லாம்
ஆனமுக மானவனே திருமயிலை யண்ணடுதி யரைவ தற்கு
ஞானமுக மாயுளத்தி லினிதிருந்து வருடா நமோ நமஸ்தே.

(இதன் வியாத்தியுரை) பதி, பசு, பாசம், ஆகிய மூன்றும் ஒன்றுக்கொன்று வெவ்வேறு குணம், லட்சணம், செயல் முதலாகக் காணப்படுகின்றனவோ அதைப்போல; பிறவிகளானது தானம், தவம், முன் சனனத்தில் முடிந்தபடி (விட்டகுறை, தொட்டகுறை என்பனவாய் சன்மகன்மம் அனுபவிப்பது சாட்சியமாகிய சான்றாக நிற்றலுடைத்து. அங்ஙனமே அதாவது, அம்மேறையாக (முழுமுதற் கடவுளாய், சருவசொரூபியாய் சருவ சுதந்தர, பரதந்திர சகல கோலாகலனாய், பிரணவாகார தற்பராத்ம பிம்பமாய், நெருப்பிற்சூடு, பாலிற்சுவை, பொன்னிலொளி, பூவில் வாசனை, தேனில் இனிப்பு, கலந்தவண்ணம் (அண்ட பிண்டம்) அண்டாண்ட சராசரம் (அண்டபகிரண்டமு மடங்கவொரு நிறைவாகி ஆனந்தமான பரமே) என்றத் திருமொழி ஓர்சிறிதும் பேதமின்றி தேவர், மக்கள் விண்ணுலகோர், மண்ணுலகோர், எவ்வவசரத்து வருந்தி வணங்கினார்களோ அவ்வவசரத்தெல்லாம் வேண்டுவன, காண்பன, (சுழுத்தியோ சாதனம், நிதித்தியோசாதனம், பதித்வசாதனம், என்பன பல மூர்த்தபேதமெலாந் தன துருவமே எல்லாவுருவமானதாக நிலைப்பெற்று; முதல்வனாக நிறைந்து விளங்கிய விநாயகக் கடவுளே! திருமயிலை ஸ்ரீ கபாலீச்சுரனின் துதியை சொல்வதற்கு (ஞானம், அறிவு, புத்தி,) இத்தன்மை நிறைந்த அருள்விலாசந்தங்கிய ஞானமுக குருபீடரட்சண்ய மூர்த்தமாக உள்ளத்திலமர்ந்து அநுக்ராஹஞ்செய்யும்படி நமஸ்கரிக்கின்றேன் என்பதாம். (௰)

—※—

நெறிமுறையிலக்கணம்.

சருவமுநி னருள்வழியே யுள்ளசெனு மறைமொழியே சான்றாய் நிற்கு
மிருவினையற் றவர்களுக்கே யிவையெளிதா மேதமெனுமிடுக்க ணுற்றுக்
கருவழிக்கே தலைப்படுவே னென்னறிவேன் பிழைக்கவே கருணைநல்குந்
திருமயிலை யீசன்றுதிக் கருடர விநாயகனே சிரஞ்சாய்த் தேனே.

(இதன் வியாத்தியுரை.) எல்லாமுனது கிருபையினிடமே நிறைந்திருப்பதென வேதவாக்கியமே சாட்சியமாய் நிலைக்கும். இதனுண்மைப் பொருளானது நன்மைத்தீமையற்ற வுத்தமர்க்கே லேசானதாகும். பாபமெனு மீளாத்துன்பமடைந்து; பிறப்பதற்கே முன்னிற்பவனாகிய பேதையேனைத்தெரிவேன் சனித்த சன்மத்திலேயே வாழ்ந்துபோக தயைசெய்து திருமயிலை கபாலீசன் தோத்திரத்திற்கு அருடரும்படி விநாயகக் கடவுளே! தலைவணங்கினேன் என்பதாம். (௰௧)

—§—

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

—(*)—

சென்னைத் திருமயிலை

ஸ்ரீ கபாலீஸ்வரரின்

சிவஞானவிபுத்வவிபுலம்.

உபாசனாமூர்த்த ஸ்தௌத்யம்.

—§—

ஓம் ! சர்வ மங்கள தேஜோமயமாகிய சிவபெருமானே ! சமஸ்த லோக சரண்யகாரண பூதராகிய பரமேஸ்வரனே! சிருட்டி, திதி, சம்ஹார திரோபவ, அநுக்ரஹமாகிய பஞ்சகிருத்திய கருணாநிதியே ! அடியார்கட் பிறவியெனும் வினையாகிய சமுத்திரத்தை வற்றச்செய்து அளவிடப்படாத வரங்களைக் கொடுத்து ஆதரிக்கும் மஹாதேவனே! நமஸ்காரம்.

சத்துசித்தானந்த நித்திய பூரணவடிவாய், சுயம்பிரகாச, சுகோதய, பிரணவாதீத. பிர்மானந்த நிட்களங்க, நிரந்தர, நின்மலமாய், எல்லாவுயிர்கட்குயிராகி, அநாதிமுத்த சித்துருவாய், சத்தியஞானானந்த சொரூபமாய், அகண்ட சமரசசுகமாய், ஆதார, நிராதாரமாக யெங்ஙனுமோர்சிறிது நீங்காது ஏகநாயகனாகத்தானே கலந்துங்காணக்கூடாதவனாய், ஆன்மா, பிராணன், சிவன், ஆவி, உயிர், அறிவு, ஞானம், சுகாதீதம், வெறும்வெளி, பாழ், தத்துவமுடிவு, சுகிர்லாபசத்தோதயம், பிரமபோதினி, சத்தசதாக்கியம், தத்ஸத், அண்ட பிண்டத்ரயாதிகவசம், சகோளகாரணம், பஞ்சபூத பௌதிகவிதானம், சாக்கிரதாதி, சுழுத்தியாதீத பிம்பசலட்சணம், சீவ முத்தபரேணியம், மஹாத்மவியாப்பியம், சித்தராக்ரஹணபௌஷிய மகத்

வம், தேகசொரூபலட்சணாம்ஸ பிராணபடனம், வித்தியாதத்துவ யோக சரணாக்ரஹண மனோலய சம்பூரணம், லிங்காதார வைபவாத்வைதிக பரிணம், ஆகாயப்பரிணம் அந்தர்யாம பரதந்த்ரம், சுயம்ப்ரகாச சத்திய பாஷதிய மஹாமந்த்ர ரூபனாம் சகஸ்த்திரானுபவ ஏகாகார, பஞ்சாக்ஷர, சடாக்ஷர, அஷ்டாட்சர, ஐம்பத்தோரட்சர, ஆயிரத்தெட்டு இலட்சாதிகாரத்வ விபுத்வ அட்சராம்ஸ யிலக்கணத்தினிடத்தே; அவ்வவ்வமைய இலட்சணத்தை யுடையதாய் பத்தியில் விளையும் பரம்பொருளென்னும் பசுபதியாகிய பரசிவப்ரபுவே! நமஸ்காரம்.

ஆதியாய், அந்தமாய், நடுவாய், சோதியாய் பரமானந்த பரப்ரமமாய், பல்லுயிர்களையும் படைத்துத்தாங்கி சரிவர நடத்திக் காக்கும் முடிவில்லாத கிருபாகரமூர்த்தியாய், நீடியசாந்தமுமிகுந்த தயாநிதியாய், ஜக ஜட சீவபர சர்வ தத்துவாதீத தன்மாத்திர அகம் பிரம்மாகாரமாகி விளங்கும் நின்மலனாகிய சிவமாகி வேதாகம சொரூபனாய் அவைகளின் அர்த்தபாவனாய் சர்வேஸ்வர த்வத்தையுடையனாய், சிவாகார பிரணவரூபனாய் இருவினையொப்பு மலபரிபாகமமைந்த சத்தினிபாத வுத்தமர்கட்குக் குருவாய் துரியனாய்; துரியமுங்காணாத அதீதனாய், தத்பத மகா வாக்கியத்தின் பொருளாகிய சிவமாய், மறைமுடிவதனில் விளங்கிடுந் தனிப்பரஞ்சுடராய் உபநிடதங்களிற் கூறும் அந்தரங்கமான பிரஞ்ஞானம், பிரமமென்னும் இருக்குவேத வாக்கியார்த்தமாகவிளங்கு மத்துவித ஸ்வரூபமாகிய தன்னை விலட்சணமாகவும், சுலட்சணமாகவும் ஆகமாந்தத்தில் சொரூபவிலக்கண நிஷ்களமாகவும் தடத்தவிலக்கண சகளமாகவும், இவற்றையுங் கடந்த பிராம்மிய பாவனமாகவும், துதிப்பவர்களிடத்தன்புடையவனாகவும், பிரபஞ்ச முதல்வனாகிய பசுபதியே! நமஸ்காரம்.

அருட்சத்தியாகிய பார்வதி தேவியோடு வீற்றிருக்குஞ் சிவமே! அசோசரபாநுகோடி தேஜசையுடைய பரனே! காமகோரத்தால் தம் தம் வினைப்படி பசுக்களைப் பிடித்துக் கர்ம பாசத்தாற்கட்டி ஆள்பவனே! சம்புசிவ சங்கரனே! சாம்பசதாசிவனே! வேதாகமவழியிலே நடக்கும் மெய்யடியார்களி னுள்ளத்தின்கண் குடிகொண்டிருக்கும் பரமசிவமே! அந்தராத்மாவாக விளங்குந் தன்மையினால் எல்லாவுயிருந் தானாயிருப்பவனாய் சர்வ வியாபியாகவிருந்து யாவற்றையு மசைவிக்குந் தன்மையால் அண்டபிண்ட சராசராத்மக அகண்ட அறிவானந்தமேனியனாய், ஜெகசிவபரங்கட்கு அன்னியனாகையால் எங்ஙணுமெய் சாட்சியனாய், ஸ்வய, ஸ்வபாவ, அநாதி நித்தியானந்தனாய் விளங்கும் நிமலபரிபூரண விமலனுமாகிய சிவானந்தனே! நமஸ்காரம்.

ஞானநாயகனும் மெய்ஞ்ஞானமின்னதென்றறியாமல் காமக்குரோத முதலிய துக்கபேதங்களனைத்தினுக்கு நடுங்கி அளவற்ற சனனமென்னும் பள்ளத்தில்வீழ்ந்து கனத்த சுமையைச் சுமந்துகொண்டு தடுமாறும் அடியேனுடைய ஆன்மபோதத்தின் கண்ணதாகிய சுகானுபவ சொரூபானந்த வள்ளலே ! நமஸ்காரம்,

ஆதியந்தமில்லா வரும்பெரும் வடிவாய் எங்கணுநிறைந்து பரிபக்குவமுடைய ஆன்மாக்களுடைய இருதயத்திற்றானே பொங்கித்ததும்பும் பேரானந்த வாரியில் ஞானானந்தமாக விளங்கும் பரமாத்மலட்சணகாரப் பிழம்பாய், பார்த்தவிடமெங்கும் பரம்பொருளாகத் தோற்றுபவனாய் அந்தராத்மாவாகத் தோன்றுந் தன்மையினால் எல்லாவுயிருந தானாயிருப்பவனாய், வைகரி, மத்திமை, பைசந்தி, சூக்குமையென்னு நான்கு வாக்குகளையுங் காரியப்படுத்துபவனாய் ஞாதுரு, ஞானம், ஞேயமென்னுந் திரிபுடி ரகிதனாய் தீவிரதரம் வாய்ந்து தெளிந்த சிந்தையர்க்குத் தெவிட்டாத ஞானவாரியை வழங்கும் பிரபுத்வ சாமர்த்திய குணத்தையுடைய பெருமானே ! அநாதியாயுள்ளவகண்ட ஆணவமலமாகிய அந்தகாரம் ஆன்மாக்களினின்று நீங்கியோட கோடி சூரியர்களைப்போல அடியவர் இதயத்தாமரையிற்றங்கி திருவருளென்னும் ஒளியை வீசுகின்ற மெய்ஞ்ஞான மூர்த்தியே நமஸ்காரம்.

தேவர்களுக்கும் முனிவர்களுக்கும், திருக் கூழாத்தினராகிய உண்மைத் தொண்டர்களுக்கும் அளவிறந்த மஹானியர்களாகிய சிவேஸ்வர சித்தராதிய முத்தர்கணங்களுக்கும் அமுதமாகியத் திருவருட்சுவையைத் தருபவனே! சுயம்ப்யிரகாசமாகப் பிரகாசியாநின்ற துரியமாயும், அலையில்லாத சமுத்திரம்போல் துரிய சம்பூரண மௌனானந்த பிரமானந்தப்பெருக்காய் வாசாகயிந்திரியமாக அகம்பிரமமென்பார்களுடைய நாக்கை (சத்திநாயனரைப்போல்) அறுப்பவனே! பேரின்ப வீட்டை யடைய வேண்டுமென்கின்ற ஆசைக்கொண்ட அடியேனுடைய பலவகைக் கோரணிச்சேட்டைகளையுள்ள மனம்; விடயங்களிற்சென்று பலவிதக் கொடுமைகளைச் செய்யாமலும், சங்கற்பமனைத்தும் என்னைத் தொடராமலும், பஞ்சேந்திரிய மயக்கம் என்னிடத்திற் குடியிராமலும், வீரகண்டாமணியணிந்த தாமரை மலர்போன்ற உனதுத் திருவடிகளை தியானித்து வணங்கும்படி கடைவிழிசாய்த்தருளும் சிவபெருமானே ! நமஸ்காரம்.

பிரமப்பிரகாசமாய் நிச்சலமாய், சுகாதீத தத்வானுபவ சருவ கோலாகல பொன்னார் மேனியை யுடையவனாய், சூரியன். சந்திரன், அக்கினி, இம்மூன்றையு மூன்றாக் கண்களாகக்கொண்டு சகலவுயிர்களையும் ரட்சிக்

கின்றவரே! துர்க்கந்தம்நிறைந்த வூத்தையுடலே மெய்யெனநம்பி கியான சூனியத்தால் ஆசாபாசத்திலழுந்தி இவனிவளிதுவெனக் குலாவி மகிழ்ந் திக்கொண்டிருக்கும் அற்பவறிவையுடையவனே இம்மாயாகாரிய பிரபஞ் சத்தில் ஐம்பொறிகளாகிய வேடர்களால், வளர்க்கப்பட்டு அஞ்ஞானத்தன் மையடைந்திருப்பதால் உனது மகிமையையும் பெருமையையு மறியாது மயங்கிப் பிரபஞ்ச வாழ்க்கையில் தடுமாறுவதினாலே அதிலிருந்து விலக்கி ஆனந்தத்தாண்டவம்புரியும் உன் திருவடி நிழலடையும்படி கிருபை புரிந் தாளுமையா கர்த்தனே! தேவர்களுமிருடிகளு நெருங்கிநின்று வணங்கத் (தனத்தனந்தன தன தன) வென்னுந் தாளத்துக்கேற்ப ஆனந்தஞான நிருத்தத்தைச் செய்யுஞ் சிவபெருமானே! நமஸ்காரம்.

பரம சாந்தத்தோடும் எங்கும் ஔபச்சிலேடிகமாக நிறைந்த சம்பூர ணமே! சுத்ததன்மய பரஸ்வயம் பிரம்மஞான ஸ்வரூப ஸாக்ஷாத்கார முத்தி யநுக்ரஹஞ்செய்யும் ஞானாசாரியனாக (சனகனாதியர்க்கும், வாதவூரடிகள்) முதலிய அன்பர்கட்கும் தோன்றிய மஹாப்ரபுடீக விலாசனே காளகண்ட திரிநேத்திரத்தை யுடையவனே! நாயினேனுடைய வஞ்ச நெஞ்சத்தை இங்குமங்கும் ஓடவிட்டு அதின் சேஷ்டையால் துன்பமடைவதற்கேதுவா கிய பஞ்சபூதத்தின் கொட்டமடக்கி சென்மாந்தரங்களி லுண்டாயிருக்கும் கன்மசேகரமாகிய சஞ்சிதத்தை நீக்கி அநுக்ரஹஞ்செய்யும் என்னப்பனே நான்குவேதம் இருபத்தெட்டாகமம் அறுபத்துநான்கு கலைஞானம் கற்று ணர்ந்து அவையினிறுதியின் லட்சணத்திற்கலந்த மஹான்களிடத்தே தத் துவாதீத சொரூபகாட்சிதருகும் சிவபெருமானே! நமஸ்காரம்.

வேதபாதுகையனே! சுகசொரூபமே! கனகாம்பரதர கனகசடாதர கனகசுபாகர, கந்தர்ப்பகோடி சதசுந்தர திவ்ய பரப்ரம்ம நடேசப்பெரு மானே! நந்திவாஹனனே! அந்திமேனியனே! தருமமால்விடையோனே சமயாதீதப் பழம்பொருளே! துவிதபாவனையுடைய மெய்யடியார்களுக்கு நேசனாயிருப்பவனே தேகபந்தத்திற் காணப்படுகின்ற சகல பந்துக்களான உறவே! உலகெலாம் நிறைந்த வகோசர சுயம்பிரகாசமாக விளங்குஞ் சிவ பெருமானே! நமஸ்காரம்.

கங்கையுஞ் சந்திரனும், சடைமுடியும், முக்கண்ணும், சதுர்ப்புயமும் காதிற் குண்டலமும், மார்பிற் பூணூலும், பொன்வட மாதியாபரணமும், செங்கையில் மழுமானும், உடுக்கையும் பீதாம்பரமும் தண்டைச் சிலம்புங் கொண்ட புண்ணியத் திருநீறென்னும் விபூதியே திருமேனியாகவுடைய ஞானதிக்ய சிவசொரூபமே! நமஸ்காரம்.

பிருதிவியாதி முப்பத்தாறு தத்துவங்களையுஞ் சோதித்து நியதிகளைந் து பஞ்சசத்திகளைச் செய்யும் மெய்யடியார்களுக்குத் தன்னை உள்ளபடி

அறிவிக்கும் பரமபதியாகிய ஆண்டவனே! சேதனாசேதனப் பிரபஞ்சங்கட்கெல்லாம் ஆதாரமாயிருக்கும் பராபரவஸ்துவே! சர்வசாட்சித்துவ பரமானந்த சுத்த பரப்ரம்மமாய் விளங்குந் தனிப்பொருளே! முத்திக்கு வித்தாய் முழுமுதலாய், மூதறிவோர்கட்போற்று மூலகாரணனாய் அருவம், உருவம், அருவுருவங்கடந்த அனாதியனாய், தனது திருவருளையே பராசத்தியாகக்கொண்டவனாய் முக்குணரஹிதனாய், மும்மலங் கடந்தவனாய், அரிப்பிரமேந்திராதிகள் காணாத அரும்பொருளானவனாய், அரிய மறைமுடிவாமாதனபீடத்தமர்ந்த ஞானநாயகனாய் விளங்கும் விமலப்பரஞ்சோதியே! அகாராதி க்ஷகாரந்தமாகிய ஐம்பத்தோரட்சர ஸ்வரூபனாய், வேதாந்தமென்னும் விருக்ஷத்தினுச்சியிற் பழுத்த சைவ சித்தாந்தமென்னுங் கனியினிரசமாகிய பரமாய் தற்போதங்கடந்தவர்களாற் காணப்படுங் கண்ணுதலாயும் பிரகாசியாகின்ற சதாசிவமே! நமஸ்காரம்.

பரமஞானிகள் கண்டு தரிசித்துச் சிவானந்த செல்வத்தினை யனுபவித்து உச்சீவிக்கும்படி துரியாதீதமெனப் பெயர்பெற்றுத் தடையின்றி விளங்குஞ் சொப்பிரகாச வடிவாயுள்ள பரம்பொருளாக விளங்குகின்ற சர்ப்பாபரணனாகிய திருச்சிற்றம்பலவாணனே அஞ்ஞானிகளுக்குச் சீவசாட்சிமாத்திரமாயும்; ஞானிகளுக்குப் பரசாட்சிமாத்திரமாயும், நிறைந்தொளிரும் அனந்தஞான சொரூபனே, கருணாகரனே, தேவதேவனே, உண்மையான பக்தர்கள் தோத்திரத்தில் நேசம்வைக்கும் சதாசிவனே! பிரமன்முதல் பிபீலிகா பரியந்தமுள்ள ஆன்மகோடிகளையும், அவ்வான்மகோடிகளனுபவிப்பதற்கேதுவான தனுகரண புவன போகங்களையும் முறையே கூட்டி முடிப்பித்துக் கார்த்துரட்சியாநின்ற ஆதிகாரணனே நீயென்றும் நானென்றும், அதுவென்றும், இதுவென்றும், எதுவென்றும், அதுயிதல்லவென்றுங் கூறப்படும் பேதமின்றி யெங்கணும் பரிபூரணமாக வியாபித்துநிற்கும் பரனே! பராபரனே தானேதானாகவிளங்கும் நடேசப்பெருமானே, சோமஸ்காந்தனே, கலியான சுந்தரனே நமஸ்காரம் கானலின் சலம்போலவும், கிளிஞ்சல் வெள்ளிபோலவும், கந்தர்வ நகரம் போலவும், சொர்ப்பன பிரபஞ்சம்போலவும், மலடி புத்திரன்போலவும், தோற்றன்மாத்திரமாகிய பிரபஞ்சமானது மாயாகாரியத்தாற் பொய்யாயிருக்க; மெய்யென நம்பி துன்பமடைந்து பாழாய்ப்போன நான் என் பிறந்தேன்? மோகமாகியவிருளை ஞானோபதேசமென்னுஞ் சூரியவொளியாற்போக்கி; சண்டாளனாகியச் சிறியனின் ஆசையினாற் சொல்லக்கிடந்த இச்சிறு விண்ணப்பத்தை தள்ளாதுயேற்று ஆதரிக்கவேண்டும் ஐயனே மஹாப்ரபுவாகிய சிவபெருமானே! திருவடிக்கு நமஸ்காரம்.

ஓம் நமப்பார்வதே பதயே நம: அரஹர மஹாதேவ: திருச்சிற்றம்பலம்:

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

—(*)—

நூல் – சந்தக் கலிவிருத்தம்.

மூலமும், வியாத்தியுரையும்,

அருமா தவர்க டுதிசெய் யரனே
பெருமை நிறைந்தப் பெரியோ னலவோ ?
ஒருவா தெனையா ளுயர்ப்புண் ணியமே
கருணா கரனே கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) தவத்திற் சிறந்தோரால் வணங்கும் அரனே! எல்லா கீர்த்தியு மலிந்தத் தலைமையோன் நீயல்லவோ? அடியேனாகிய வென்னை பாபத்திற் கருகனென்றெண்ணிக் கைவிடாது ஆண்டருளும் இவைதான் மேலான தன்மம், கிருபைசுரக்குங் கையனே! பிர்மாவின் கபாலமாகிய மண்டையோட்டைக் கையிலேந்திய பரமசிவமே! என்பதாம். (க)

எண்ணாத் துயர்க்கொண் டிளைத்தேன் களைத்தேன்
புண்ணாங் குழியிற் புதைந்தேன் சிதைந்தேன்
மண்ணா கிடுமுன் மகிழ்சீ ரருள்வாய்க்
கண்ணா யொளிசெய் கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) பாபாத்மாவாகப் பிறந்தக் கொடியேனெடுத்தயிவ் வூத்தைவுடலாலுஞ் சிந்தை மயக்கத்தாலும், கணக்கிட்டொழியாதத் துக்கத்தை யனுபவித்து சருகாக, அதாவது; எலும்புந்தசையாக வுறுகிப்போனேன் தாங்கமுடியாது சோர்ந்துப்போனேன்; இவைகட்கு மூலமாயிருக்கின்ற வினைநிறைந்த உளைப் பள்ளத்தில் மூழ்கினேன்; அதனால் எல்லாக்குறைவுற்று சீர்குலைந்தேன்; இக்கதிக்காளானவடியேன் மண்ணாகிய நான் மண்ணுள் மூடப்பட்டு, மண்ணாகப் (பிருதிவியாக) போவதற்கு முன்னரே உனது பெருமையைச் சொல்லி சந்தோஷிக்கும்படி சிறப்பையருளவேண்டும், நேத்திரமாகவும், அந்நேத்திரத்திற்கு பிரகாசத்தைவுண்டு பண்ணுகின்ற கர்த்தவ்யனே! பிர்மாவின் கபாலமாகிய மண்டையோட்டைக் கையிலேந்திய பரசிவமே! என்பதாம். (உ)

மனித வுருவே மகத்தென் றுரைத்தா
ரினிதென் பதுவே யேகாந்தம தாம்
அனியா யமதா யழியிற் றுயரே
கனிந்து னருடா கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) எல்லா சனனத்திலும், மக்கட்பிறப்பே மகா சிறந்ததென பெரியோர்கள் சொன்னார்கள். அதிலே; மனம், புத்தி, சித்தம், அகங்காரம் இவைகளால் விளைகின்ற கன்மானுசார நீச்செயலை யெவ்வவதரத்துங் கைக்கொள்ளாது யாதொருபற்று (அகப்பற்று, புறப்பற்று) மில்லாது சதா ஆனந்த பூமியிலே; ஞானப்பா லருந்தி தன்னை யுள்ளபடி யறிந்து நிட்காமியத்தனாய், (பாலிற்சுவை, பூவில் மணம், தேனிலினிப்பு பொன்னிலொளி, பிரிவினையின்றி கலந்துள்ளதோ) அங்ஙிலைப்பொருந்த சிவத்தோடு கலந்திருக்கும் பேரின்பமே, இன்பமென்றும் வகுத்து நிச்சயித்ததை ஒருசிறிதுங் கவனியாது உனக்கடிமையாகி நன்மையைச்செய்து திருவருட்கருகனாகாது; பிறந்தவைக்கும் பலனியாதுமின்றி விறுதாவாக (நியாயமில்லாது) மாண்டுப்போனால், முடிவாகநிற்பது யாவருக்குந் துக்கமே அவ்வணமாகாது மனம் பழுத்து அதாவது; சிந்தையுவந்து உனது கிருபைத் தரவேண்டும், பிர்மாவின் கபாலமாகிய மண்டை யோட்டைக் கையிலேந்திய பரமசிவமே! என்பதாம். (ங)

அருளே! பொருளே அனைத்து ளுயிரா
யிருப்பா யறிந்தா ரெழிலுள் ளவரே
வருந்து மெளியேன் வாழ்க வரந்தா
கருதும் வடிவே! கபாலீச் சுரனே.

(இதன வியாத்தியுரை) சருவ நன்மைக் கிருப்பிடமாக விளங்குந் திருவருவே! அத்திருவுருவத்திற்கான வத்துவே! எல்லாவற்றினுஞ் சிவனாகயிருக்கின்றனையென்றுத் தெரிந்தவர்களுனது ஆசிரடைந்தவரே உலக மாயா சம்பந்தத்திற் பந்தப்பட்டு நீக்கிக்கொள்ள வழியாது முணாது இரவுபகலொழியாத விடுக்கணுற் றவித்து செஞ்சித் தொழுகின்ற எழையாகியவடியேன் அவைநீங்கி, உம்முடைய திருவடி கமலத்தில் ஒருவணாகசனித்து அதன்கணுண்டாகும், தேனைசாப்பிட்டு சதா நீடித்தோங்கும்படியானத் திருவருளைக் கொடுக்கவேணும். மெய்யடியார் எவ்வேளையும் மறவாது உள்ளத்தில் நினைக்குஞ் சிவவருவமே! பிர்மாவின் கபாலமாகிய மண்டையோட்டைக் கையிலேந்திய பரமசிவமே! என்பதாம். (ச)

மதிநீ! துதிநீ! மன்னும் பலவா
நிதிநீ! கெதிநீ! நிலைநின் றவனீ!
பொதியே சுமந்தேன் பொருந்தேன் றிருந்தேன்
கதிநீ! யெனையாட் கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) ஆன்மாக்களாகிய பசுக்கள் கடைத்தேறும்படியான வழியைக் காட்டாநின்ற புத்தியும்நீயே, உலகினிடமாக சிறந்து விளங்குகின்ற; உலோகங்களாகும் இரத்தினம், பொன், வெள்ளி, செம்பு

பித்தளை, ஈயம், இரும்பு முதலாகிய செல்வமும்நீயே, அவைகளுக்காக வுழைத்து வீணே கெட்டுப்போகாது; ஆசாபாசமாகும் வினைக்கடலைத் தாண்டி உனது அருட்பிரவாகத்தில் மூழ்கி; அடையவேண்டிய முத்தி சாதனைக்குரிய (ஆசாரம், பக்தி, விரதம், பூசை, மந்திரம்) இவைகளைக் கொடுக்கக்கூடிய ஒழுக்கமும் நீயே, அவ்வொழுக்கமாகிய கிரமத்தைக் கைக்கொண்டாருடைய இருதயத்தைவிட்டு நீங்காது என்றும் வியாபகமாகயிருந்தவனும் நீயே, புழுநிறைந்ததும் புலாலுடையதுமான ஊத்தைச் சடமாகிய தேகமூட்டையைத் தூக்கினேனன்றி, உனது மெய்யடியார்த் திருக்கூட்டத்திலே கலந்துவாழ்த்தி வணங்கியிருக்க கிஞ்சித்தும் மனப் பொருத்தமுடையவனுகேன் அந்நெறிமாறுது நிலைநிற்கும்படி பெரியோர் களாகிய குருக்கள் வாக்கியத்தினுல் திருத்தமாகேன்; எப்படியாகிலும் உடலைவிட் டுயிர்போகும்படியான முடிவுகாலத்திற்கு ஆதாரமாகயிருக்கின் றவனீயே, ஆதலால் எவ்விதக் குற்றத்திற்குப் பாத்திரவானுக அடியேனி ருந்தாலும் அவையெல்லாம் (மக்கட்குற்றத்தை மன்னிக்குந் தாய்தந்தைப் போல) பொறுத்து அடிமைக்கொள்ளவேண்டும். பிர்மாவின் கபாலமாகிய மண்டையோட்டைக் கையிலேந்திய பரமசிவமே! என்பதாம். (௫)

அனவ ரதமா லயம்வ லமதாய்ப்
புனலாட்டி மலர்ப் போட்டர்ச் சனைசெய்
தனனு னலவூழ் தனக்கே யுழைத்தேன்
கனக மலையே! கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) சதாகாலமுந் தேவரீர் திருமூர்த்தமாக விளங் கும்படியான கோவிலை வலமாகவந்து பஞ்சகௌவியங்கந்த முத்திரையிட் டுள்ள சலத்தினுல் திருவுருவத்தை அபிஷேக முதலியவைச்செய்து அஷ்ட புட்பங்களைச்சாத்தி, ஆராதனை செய்தவனுனல்ல, ஜென்மாந்தர கன்மத்திற்கே பாடுபட்டேன் பொற்சிமிலையே! பிர்மாவின் கபாலமாகிய மண் டையோட்டைக் கையிலேந்திய பரமசிவமே! என்பதாம். (௬)

வீணுய்ப் பிறந்தேன் மெலிந்தே னலிந்தேன்
தூணுய்க் குடும்ப சுமையைச் சுமந்தேன்
நாணு திருந்தே னுயேன் கதியென்
காணு வுருவே! கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை.) அடியேனுமக்கு நல்லயனுகி திருவருட் பெரும்படியானப் புண்ணியத்தைச் செய்யாது விருதாவாகத் தாய்க் கரு விற்சனித்தேன், வயதேறயேற பலவித ஆசாபாசத்தினுற் கட்டுபட்டிளைத் தேன், பிணியுற்றேன், பெற்ருர், பிறந்தார், மனைவி, மக்கள், சேர்ந்தார் முதலாய்க் கேளினர்களென்னும் பெரும்பாரத்தைத் தாங்குகின்ற ஸ்தம்ப

மானேனன்றி பிறவிக்கேற்ற லாபத்தையடையாதிருப்பதைப்பற்றி, சிறிதும் வெட்கப்படாதிருந்த சுணங்கனுகிய வெனது முடிவான நிலைமையென்ன? அற்பவறிவினுல் அவபக்தியினுல் காணமுடியாத ஞான சொருபமே! பிர்மாவின் கபாலமாகிய மண்டையோட்டைக் கையிலேந்திய பரம **சிவமே!** என்பதாம். (எ)

விடையே றிவரும் விமலேச் சுரனே
படையோ டேமன் பற்று முனஞ்சீ
ருடைய நலந்தா வுமக்கே புகழ்காண்
கடையே னறிவாய் கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை.) மாலெனும் நந்தியின்மேல் சாரிவருங் குற்றமற்றக் கடவுளே! தூதர்களாகிய சைனியத்துடன் கூற்றன்வந்து என்னுயிரைப் பிடிக்குமுன்னரே; உனது திருவடிக்காளாகும்படியான சிறப்புடைய நன்மையை அநுக்ரஹஞ் செய்தருளவேண்டும். அப்படி; அடியேன் முறையைக்கேட்டுச் செய்தால், அந்தப்பெருமை தேவரீருக்குரியதேயாகும். ஆயினும்; அவ்வித பெரும்பாக்கியத்தையடையும்படியானவனல்லவே உலகிலுள்ள ஆன்மாக்களிலியான் மெத்தவுந் தாழ்த்தப்பட்டவனென்பது உனக்குத்தெரியும், பிர்மாவின் கபாலமாகிய மண்டையோட்டைக் கையிலேந்திய பரமசிவமே! என்பதாம். (அ)

ஆத்தா ளுமையோ டமர்ந்தா யுகந்தா
யூத்தைக் குழிக்கே யுழைத்தேன் பிழைத்தேன்
நீத்தார்ப் பெரியோர் நெறியொன் றறியேன்
காத்தாள் தருணங் கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) சாட்சாத்காரமாகிய பரமசிவமே! எனதுத்தாயாகிய உமாபிராட்டியோடு, வீற்றிருந்தாய் அம்மையோடு கலந்து சருவசராசரங்களையு முண்டுபண்ணும்படி நினைந்தாய் அடியேன் கன்மத்தினுலுண்டாகிய சஞ்சிதவாசனையின்படி; மலநிறைந்த வயிறெனும் பள்ளத்தையடைப்பதற்கே இரவுபகலாகப் பாடுபட்டேன் உண்டவுணவினுல் வலிகொண்டு சீவித்திருக்கின்றேன். அறிவிற்சிறந்த முன்னோர்கள் உலகபாசபந்தமென்னும் பற்றுகளியாதும் வேண்டாது வெறுத்துள்ளார் அம்மஹான்களுடைய ஆசாரமாகிய கிரமத்தில், ஒன்றேனுந் தெரிந்தில்லேன் எல்லாப்பிழையும் பொறுத்து இந்தச்சமயங் காப்பாற்றவேண்டும் பிர்மாவின் கபாலமாகிய மண்டையோட்டைக் கையிலேந்திய பரமசிவமே!

பழமு நறவாய்ப் பாலுஞ் சுவையாய்
மழலைக் குணமாய் மன்னும் பரமே!

விழலுக் குழைத்த வெறியேன் சிறியேன்
கழலென் றெரிவேன் கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) கனிந்தக் கனியும், அக்கனியினுட் கலந்து யினிக்கின்றத் தேனுகி, அமுதத்திற்குரிய மதுரமாகி, யாதுமறியாதப் பாலகருடையத் தன்மையுடையனவாய்ச் சிறந்து விள்ங்காநின்ற பரபிர் மமே! அடியேன் முன்பினறியாது; யாதொருப்பயனுமில்லாது பொய் யான வீண்காரியத்திலே கஷ்டப்பட்ட பைத்தியத்தை யுடையவன், கா ணப்படுகின்ற ஆன்மாக்களிலியான் வெகுசின்னவன் அருட்பிரகாச வள் ளலாகிய நினது திருவடியை என்னத்தெரிந்துக் கொள்வேன் பிர்மாவின் கபாலமாகிய மண்டையோட்டைக் கையிலேந்திய பரமசிவமே! என்ப தாம். (௰)

வற்ருக் கடலே வளியே வொளியே!
உற்ரு ருனைப்போ லுளரோ வொருவர்
பற்ருன தெலாம் பறக்கு முடிவிற்
கற்ரூர்ப் பணியுங் கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) தனவந்தர்களிடத்திருக்கின்ற செல்வத்தை யெடுத்து ஏழைகட்கும், சன்மார்க்கத்திலுந் தானதன்மஞ் செய்தாற் குறைந்துவிடுமேயென்ற எண்ணத்தை யுடையவர்களாகி, தயாளச்சிந்தை யற்று, தங்கள்வரையுமனுபவித்து; பொன்காத்த பூதமாகவிருந்து தானுங் கொண்டுபோக முடியாது வைத்துவிட்டு சாகும் லோபிகளைப்போலிராது தன்னை வழிபட்டோர்க்கும், வழிபடார்க்கும் அதாவது; பத்தி வலையிற் பட்டு வணங்கினேர்க்கும், வணங்காதவர்க்கும், வேண்டியவைக்கொடுத்து ஆதரிக்கும் குறைவிலாத சமுத்திரமே! யாவற்றின்மேலும் வீசப்படுகின்ற காற்றே! சுயம்பிரகாசமே! தேவரீரைப்போல உரியவர்களெனக்கு ஒருவ ரேனுமுண்டுமோ? எனது சஞ்சித கன்மத்தினல் நம்பினவையாவும் எனது மரணக்காலத்தில் ஒன்றேனு முதவாதோடிப் போய்விடும், படித்தவர்க ளாகிய ஞானபராதீனரெனும் பெத்தமுத்த சிவேஸ்வரர்களால் வணங்கும் படியான சிவபெருமானே! பிர்மாவின் கபாலமாகிய மண்டையோட்டைக் கையிலேந்திய பரமசிவமே! என்பதாம். (௰௧)

மண்ணே விண்ணே மதியே கதிரே
எண்ணே யெழுத்தே யியம்பா மொழியே!
பண்ணே யிசையே பணியே மணியே
கண்ணே கடவுட் கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) உலகெலாம் சராசரமாக பரிணமித்து விளங் குகின்ற பிரிதிவியே, ஆகாயமே, சந்திரனே, சூரியனே, கணிதமே, அட்ச

ரமே, திருவருளாலுங் குருவருளாலும் கிடைக்கக்கூடியதும், சாமான்ய அற்பவறிவுடையோரால் சொல்லமுடியாத மறைவுள்ள அந்தரார்த்த வாக்கியமே! நினது மகிமைநிறைந்துள்ளதும், புகழளாவியதுமானப் பாடலே அப்பாடலுக்குரிய சப்தமாகிய தொனியே, சர்வாபரணமே! நவரத்தினமே எல்லாவுயிரிடத்துங் கலந்து அவ்வவ்வான்மாக்களுடைய எண்ணங்களனைத்தையும் பார்த்துக்கொண்டிருக்கும் ஞானநேத்திரமே! தேகத்திற்குட் புகுந்துள்ளவனே! பிர்மாவின் கபாலமாகிய மண்டையோட்டைக் கையிலேந்திய பரமசிவமே! என்பதாம். (௰௨)

அமரர்த் தலைவா! வறிவிற் கரசே
சமர்செய்ப் புலனின் சகடை தவிர்த்தாள்
நமன்வே றெனக்கேன் நடனப் பதந்தா
சமழா லயமே கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) கைலாய முதலாக வெடுத்தானப்பட்ட முத்தியாகிய மோட்ச லோகத்திலுள்ள தேவர்கட்கு முதல்வனே, புத்திக்கு மன்னவனே! வீண்வாதையைத்தந்து; சதாகாலத்தும் அதாவது; உயிருள்ளவரையுந் தலையெடுக்காது நசிக்கச்செய்யும் போராட்டமாகிய யுத்தத்தை நடத்தும் பஞ்சபூதத்தினல், விளையும் பெருந் தொநதரவை நீக்கியாண்டருளும், அடியேனைக் கொலையுண்ணும் மரணமாகிய எமன் வேறே எனக்கென்னத்திற்கு? நந்தியின்மேல் திருக்கூத்தாடுந் திருவடியை அடியேனுக் கநுக்ரஹிக்கவேண்டும். அடியாரன்புக்குரிய ஞானமணம் வீசாநின்ற இருதயமாகியக் கோயிலே! பிர்மாவின் கபாலமாகிய மண்டையோட்டைக் கையிலேந்திய பரமசிவமே! என்பதாம். (௰௩)

பொன்மே னியனே! புனித மறையே
மன்னு நால்வர் வழுத்துந் தமிழே
என்னு ளிருந்து மெளியே னறியேன்
கன்ம மென்னே? கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) கனக மென்னும் ஆயிரத்தெட்டு மாற்றுடைய அபரஞ்சித லிங்க தேகத்தையுடையானே! அதாவது (பொன்னுணவுடலையுடையவனெனவும், அவ்வுடல் முழுதும் விபூதி யென்னுந் திருவெண்ணீறால் விளங்கப்படுதலால், விபூதிக்கு மேற்பட்ட ஆபரணமானது வேண்டுவதில்லையெனப் பொருட்படும்) ஞானசிவாகமமே! திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாச்கர் என்னுஞ் சமயாச்சாரியர்களாகிய நான்குபேரால் தொகுத்துக் கொண்டாடிப் பாடப்பெற்ற பன்னிருத் திருமுறை யென்னுந் திராவிடமே! திருவாசகமே! அற்பதேகத்திற்குள்ளாக சிவஞானமறைந்திருந்தாலும் அறியுந்திறமில்லாத

அற்பனாகிய வழை புத்தியையுடையவனாகிய நான் தெரிந்துக்கொள்ளவில்லையே; அப்படி உன்னையுமென்னையுஞ் சரிவரக் கண்டுக்கொள்ளாததற்கு எவ்வித பாபத்தைச் செய்தனனோ? பிர்மாவின் கபாலமாகிய மண்டையோட்டைக் கையிலேந்திய பரமசிவமே! என்பதாம். (௰௪)

தொல்லை யகலத் தொழுதார் முன்னோ
ரல்லலகன்று வடைந்தார்ப் பதமே
பொல்லாச் செயலிற் புதைந்தே னந்தோ
கல்லேன் * கலையே கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) முற்காலத்திருந்த அறிவு முதிர்ந்த நல்லவர்கள் வினையானது நீங்கும்படி (உடல், பொருள், ஆவி,) இம்மூன்றையும் உள்ளபடி தத்தஞ்செய்து வணங்கினார்கள்; வணங்கியப்பலனாக அன்னவரடைந்திருந்த சகடையைத் தருகின்ற ஆசாபாசமாகிய துன்பத்தை நீங்கி (பத்திக்கேற்ற முத்தியென்றபடி) தேவரீருடைய திருவடியைச்சேர்ந்தார் அக்குணத்தில், அணுவேனுமில்லாது; பாப கிருத்தியத்தி லமிழ்ந்தேன் ஐயோ! இக்கன்மவனத்தைச் சுட்டெரிக்கத்தகுந்த சுருதியாகிய மெய்க் கல்வியைப் படிக்கேன் (ஞானத்தைக் கொடுக்கத்தக்க பிரபல சாத்திரங்களைக் கற்காது) அஞ்ஞானமாகிய வீண்காரியத்திற் பிரவேசித்து முடிவிலியாதொரு நன்மையுந்தாராது கெடுக்கச்செய்யும் அற்பசுருதிகளைப் படித்தேன் பிர்மாவின் கபாலமாகிய மண்டையோட்டைக் கையிலேந்திய பரமசிவமே! என்பதாம். (௰௫)

---

* கலையெனுங் கல்வியானது எழுத்தாலாயது, அவ்வெழுத்தே யிறைவனாயது, ஆதலால்; எழுத்தை யெவ்வளவு அருமையாய், பெருமையாய் ஆசித்துக்கற்று பூசிக்கின்றானோ அதனிடமாக ஈச்சுரக்காட்சியையும், அருளையும்பெற்று இறுதியிற்றானாகின்றான்.

எழுத்தைப் பாவமான வழியிற் செலவழிக்கின்றவன்; ஞானத்தையுங் கடவுளையும் இழந்து, பாபகன்மத்தை மறுசனன முண்டாவதற்கு பழியாகிய மூட்டையாய்க் கட்டிக்கொள்ளுகின்றான். அங்ஙனமின்றி; எழுத்தேயிறைவனெனக் கண்டுபிடித்தவன், கடவுளைச் சிறப்பித்தும், ஞான சுகத்தை யருளக்கூடியதுமான; வேதாகமம், சுருதி, புராணம், அடியார் மகிமை முதலியதுடன் பக்தியாற் பாடிமகிழ்ந்து சிவபுண்ணியப்பலனை யடைந்து சிவமாகின்றனரென; அர்ச்சுனனுக்கு கிருஷ்ணபகவானுரைத்த பகவத்கீதை யெடுத்துரைக்கும். அக்கீதைக்கேட்டப் புண்ணியத்தினால்; மறுசன்மத்தில் கண்ணப்பநாயனாராக வவதரித்து காளத்தியீச்சுரர்க் கன்பரானார் இவரது சரித்திரத்திற் காணப்படுவது: அந்தரார்த்த தியானம்

பெருகி, அகக்கண்ணை தத்தஞ்செய்து, உள்ளபடியாக (சிதம்பர ரகசியம்) அதாவது தேகமாகிய சிவேஸ்வர மூத்தரிலக்கணத்தினைக்கண்டு, இதுகாறும் அடையப்பெற்றேமில்லையெனக் கண்ணீர்விட்டழுது, சுவாமிக்குத் தன்னை ஒப்புக்கொடுத்துக் கலந்துக்கொள்ளல் (அந்தரார்த்த தத்வார்த்த ஞானயிலக்கணம்) காளத்தி, காளம் - பாபமாகியப் பாம்பு, அத்தி - மும் மதமாகிய ஆணுவம், காமியம், மாய்கை என்னும் யானை இவைகளைத் தனக்குளடக்கியாள்பவன் ஈசன் - காளத்தியீச்சுரன் என்பது சைவாகமத் தெளிவு.

பிள்ளையை யுண்டப் பெருமா னென்பார்
வள்ள லெனச்சீர் வழங்கு முனமே
கொள்ளே னென்றைக் கூறேன் பிறரைக்
கள்ளன் றனையாட் கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) சருவசீவ ராசியிடத்தும் கலந்துயிராகத் தானேயிருக்குஞ் சீவனாகிய சிவபெருமானே! (தன்னையே தத்தஞ்செய்து நிரதிசயானந்தப் பெரும்வாழ்வையடைந்த மஹான்களாகிய விபுதர்களென்னும் ஆப்தர்கள்) பச்சிலையையும், பூவையுங் கிள்ளப்படாது; அது சரக் கொலையென்று பயந்தாரெனில்; அசரக்கொலையாகிய சிசு ஹத்தியையும் அதனாற் பாபசன்மத்தையும், அதனிறுதியாகிய நரகவாதனையையுமுண்டு பண்ணக்கூடிய சீராளனாகிய பிள்ளையை யறுத்து சிறுத்தோண்டன் படைக்க சுவாமி சாப்பிட்டீரென்றும், கடவுள் கருணையுடையவரென்பதற்கு மாறாக; இதக்கமற்றவரெனும் அடாதப்பெயரை வருவித்து) ஞானமில்லாதார்க் கூறுவர். ஆனால், ஒன்றிலொன்று வொடுங்குவதைப்போல மோகத்தாலுண்டாகவேண்டிய கருவாகிய இந்திரியத்தையடக்கி சமுசார பந்தமில்லாது தனதறிவாகிய கற்புக்கெடாது சுத்தரூபியாய்த் தன்னைக் கொடுத்து சிவத்துடன்கலந்து மறைதலென்பது ஞானதத்வார்த்தம்.

இஃதிங்ஙனமாக; (வான்செய்த நன்றிக்கு வையகமென் செய்தது) எனும் பழமொழிக்குச் சான்றாக, சீவர்களா லியாதாமொருபதில் வேண்டாது வரையாது வேண்டுவன கொடுத்துதவும் நின்னையேயல்லாது ஒரு பொருளையும் மனதில் வைக்கமாட்டேன் நின்னையல்லாது வேறு தெய்வத்தைச் சொல்லமாட்டேன். ஆயினும்; உன்னை வணங்க உன் திருப்பணிக்குதவ உன்னன்பரோடுகலக்க உன் ஆலயத்திற்குவருக உன்னைப்பாடியாடி ஆனந்திக்க இவைகளில் எட்டுணையும் பொருத்தமில்லாத வஞ்ச புத்தியையுடையவென் குற்றங்களையெல்லாம் க்ஷமித்து ஆதரிக்கவேண்டும் அருட்பிழம்பே! பிர்மாவின் கபாலமாகிய மண்டையோட்டைக் கையிலேந்திய பரமசிவமே! என்பதாம். (௰௬)

சென்னை-600

எலிபூ னைபின்வாய்க் கிரையா னதுபோற்
புலிவாய் மரியாய்ப் புகுந்தே துடிக்கும்
பலியா கிடவோ படைத்தாய் நலமோ?
கலிதீர்த் தருடா கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) எலியானது பூனையினுடைய வாயிலகப்பட்டதற்காகார மானதைப்போலும், புலியினுடைய வாயில் ஆடாகப்புகுந்தே முன் கன்மபந்தமான சஞ்சிதப் பிராப்தத்தினாலுண்டாகும் பாபமாகிய வினை கொலையுண்ணவோ அடியேனைத் தாய்க்கருவிலமைத்தனை? பாபாத்மாவாக; சனன மரணமாகிய ஒழியாத அலையைப்போல, நீக்கிக்கொள்ள முடியாதக் கன்மப்படுகுழியிலிறங்கி வாதைப்பட்டிறக்கும்படியாக சிருஷ்டித்தனையே இதுவுமக்கு நன்மையானதோ? ஒருசிறிதும் பயன்றாவாதலான் ஆசாபாசமாகியப் பற்றுடைய தேகாபிமானத்தை நீக்கி உமது அருளைக்கொடுக்கவேண்டும், பிர்மாவின் கபாலமாகிய மண்டையோட்டைக் கையிலேந்திய பரமசிவமே! என்பதாம். (யஎ)

தொழுகே னெழுஉந் தொல்லை யொழிய
விழுகேன் விரும்பேன் மேன்மை நினைவேன்
மழுமா னுடையாய் மங்கைப் பங்கா!
கழும லகத்துறங் கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) சர்வ சரண்யனாக விளங்குந் தனிப் பிழம்பாகிய சிவபெருமானே! எடுத்த சன்மத்திற்கேற்றப் பயனடையும்படியாக மூர்த்திகரமாயுள்ள நினதருமுருவைக் கண்டு, பரவசமுற்றுத் துதிசெய்யேன் தலையெடுத்தாற்றுகின்ற ஆழ்வினையானது நீங்க, திருவடியில் தாழேன், நினதடியாருடைய சிநேகத்தையிச்சிக்கமாட்டேன், யாவரென்னை சன்மானிக்கின்றார்களோ அன்னவர்களாற் புகழப்படும் பெருமையையே ஞான்று மெண்ணுவேன், அனலும், மானுங் கரத்திலேந்தியவா! உமாதேவியாங் கபாலி யென்னுங் கர்ப்பகவல்லியை தேகத்திலொரு கூறாகவுடையவனே! திருவருளை நம்பியிருக்கின்றத் தொழும்பனுடைய துன்பத்தைநீக்கி கருணைசெய்யவேண்டும் பிர்மாவின் கபாலமாகிய மண்டையோட்டைக் கையிலேந்திய பரமசிவமே! என்பதாம். (யஅ)

ஆக்கை நிலைக்கா தந்தோ வழியும்
நீக்க முடியா நினையே னுனையே
மூக்கை யறுத்து முத்தந் தருவேன்
காக்குங் கடவுட் கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை.) பூர்வகன்ம வசத்தின்படி யானெடுத்துள்ள புலானிறைந்து துர்க்கந்தமுடைய வுடலானது எத்தனைக்காலம் என்ன

பக்குவஞ்செய்து பாதுகார்த்திருந்தாலும், ஒருபோதுந்தங்காது ஐயோ! மண்ணுக்கு மண்ணாக மறைந்துப்போய்விடும், இதனிடத்தே வுண்டாகின்ற பாபகிருத்தியங்களைத் தள்ளவாகாது இவ்விதத் துன்பக் கட்டிலகப்பட்டு அளவிடப்படாத யிடுக்கண்களை யனுபவிக்கின்றேன் அவையொழியுமாறு சருவசீவர்கட்குந் தயாபரனாயிருக்கின்றதேவரீரைப் பாழ்ப்பட்டு அஞ்ஞானநிறைந்த புத்தியினிடத்தே எண்ணமாட்டேன்; என்செய்கையானது எப்படியென்றால்; ஆபரணமாகிய நகையையிச்சித்து அணிந்துள்ளாருடைய நாசியைத் துண்டித்து, கண்டப்போழ்து மகாயிதக்கமுங் கனிவுமுடையாரைப்போன்று, அவைமறைய அபிலாசைக்காட்டி இறுகக்கட்டி தழுவி பசப்புவார்த்தைச்சொல்லி முத்தங்கொடுப்பேன் இவ்விதத் தந்திர புத்தியுடையவனை ஆதரிக்கும்படியானக் கர்த்தவ்யமே பிர்மாவின் கபாலமாகிய மண்டையோட்டைக் கையிலேந்திய பரமசிவமே! என்பதாம்.

ஏதாவதொரு நன்மையடையவேண்டியக்காலத்து வணங்குதலும் அவை முடிந்தப்பின்பு அவமதித்து இகழ்தலும் உள்ளக்கிடையென முடிவுரை.

மனத்தை யடக்கேன் மலைக்குட் குகைக்கு
டனித்தே யிருக்கத் தானெண் ணுவனென்
வினைத்தேகமது விழுமே யழுவார்க்
கனலிற் றகிப்பார் கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) சாதனமாக யேற்பட்டுள்ள சரியை, கிரியை யோகம், ஞானம், என்னுமிந்நான்கும் பலவிதத்து நிலைப்பெறாது அலைந்துகிடக்கும் வஞ்சநெஞ்சமானது ஒடுக்குவதற்கெனச் சொல்லாதேற்படும்; அங்ஙனமாகப் பாழ்ப்படுநெஞ்சை வசப்படுத்தி அதனது வீணாவாரத் துன்மார்க்கச்செயலை யொடுக்கமாட்டேன், யாருங்காணாது சிமிலத்திற்குள்ளும், குகைக்குள்ளும், யாதொருப் பற்றுகளின்றி யாவையுமொழித்தவன் போல ஒருவனாகத் தனியாக நிற்கவேண்டியதாக நினைப்பேன், ஆனாலங்ஙன நடவாது கன்ம பந்தத்தின்படி உடலானதை வுயிர்விட்டுநீங்க பேச்சு மூச்சின்றி விழுந்துவிடும். அக்கால்: சேர்ந்தார் தெரிந்தாரியாவரு மொன்றுகூடிப் புலம்புவார். முடிவாக; சுடலையிற் கொண்டுபோய் சுட்டெரிப்பார் இதைத்தானே; என் முடிவாகவைத்தாய் பிர்மாவின் கபாலமாகிய மண்டை யோட்டைக் கையிலேந்திய பரமசிவமே! என்பதாம். (உ௰)

(குருவினால் சருவபரித்தியாய) எனும் மொழியைக்கேட்டு தான் பற்றியிருந்த யாவற்றையும்விட்டுநீங்கி தவஞ்செய்திருந்த அரசன் (வண்ணான் துவைத்துக்கொண்டிருந்த துணியின் சலம்பட்டதினாற் கோபித்து, ஏகாலியையடித்துவைது அன்னவனைத் தொட்டதினால் தோஷம்வந்ததென்ற

ஒருமுறை தண்ணீரில் மூழ்கினன், அதைக்கண்ட புத்திசாலியான வண்ணன் அம்மன்னன்முன், ஆபாசமாகிய பொய்மயக்கான அண்ணத்திற்காக மூன்றுமுறை மூழ்கினன்; இதைப்பார்த்த வரசன் வெட்கித்து; இழிகுலத்தானுகிய வுன்னைத் தொட்டதிற்காக பரிசுத்தனுகும்படி முழுகினேன் நீ என் முழுகினுயென்றுசாவ? நீ வெறுந்தோலை வெளியே தொட்டதிற்காக; ஒருமுறை மூழ்கினது சரிதான், என்னை உனக்குள்ளாகவிருக்கின்ற பரமசண்டாளனுகியக் (கடுங்கோபி) அகங்கரித்துத் தீண்டியதனுல் அக்கொடிய மனக்கர்வமொழியும்படி மூன்றுமுறை முழுகினது முற்றுஞ் சரியேயென்று பதில் சொன்னன். யோகசமாதியிற் குந்தியிருந்தவன் வெட்கித்து; அறிவின்றி மனப்பாற்குடித்தோமே ஏகாலியின் குணத்திற்கு தாழ்ந்ததுதானே நமதுச்செய்கையென அன்னவனுல், பழைய நிலையிலிருந்து குருவருளாற் சித்தியடைந்தான்.

கெடுக்கவல்லதும், நன்மையைக் கொடுக்கவல்லதும் மனச்செயலென்றெழுந்தது வேதம்.

> எதைநோக் கிடினு மெனதென்ப தில்லை
> விதையும் விளைவும் வினைவின் பயனும்
> புதைப்போல் மறைந்தப் பொருளாய் முடிவிற்
> கதைக் கட்டுரையே கபாலீச் சுரனே.

(இதன் வியர்த்தியுரை) உலகினிடையாகக் காணப்பட்டுள்ள எந்த வஸ்துவை ஆராய்ந்துப் பார்த்தபோதினும், அப்பொருளெல்லாந் தேவரீருடைய சிருஷ்டியாகப் பிரத்தியட்ச வனுபவமாகத் தோன்றுகின்றதேயல்லாமல், என்னுடையதென்பது யெவ்விடத்துமில்லையில்லை, ஆனல்; ஆன்மாக்களாகிய ஜீவர்களனுபவிக்க நேரிடுவதெல்லாம் கன்மதன்மமாகிய இருவினை விதையும், அவ்விதையின் விருத்தியாலுண்டாகின்ற நன்மைத் தீமை, பிறப்பிறப்பு முதலாகிய லாபமுமாதலான் (இதனந்தரங்கத்தைப் பாடுபட்டுத் தன்னையுள்ளபடி மறந்த மஹான்களுக்குத்தான் புலப்படக்கூடியதேயன்றி) மற்ற எம்போற் கன்மக்கடலிற் கரைகாணுத தெப்பத்தைப்போல் பாவசரக்கை யேத்தி யுழன்திருப்பாருடையப் பார்வைக்கு (பூதமறைத்து வைத்துக்கொண்டிருக்கும் பொருளைப்போல்) லேசாக வெளிப்படாது, இதனுண்மைத் தெரியாதுவாளாய்ச்சொல்லுவதெல்லாம் ஆபாச வீண்மொழியாக இறுதியிற் றெரியும் பிர்மாவின் கபாலமாகிய மண்டை யோட்டைக் கையிலேந்திய பரசிவமே! என்பதாம். (உக)

> அவனசை யாதோ ரணுவசை யாதென்
> றுவமை வகுத்தா ருயரறி வுடையோர்

நவமிக §நால்வர் காட்டினார் சைவங்
கவலைக ளொழித்தே கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) சருவஜீவ தயாபர மூர்த்தியாய் எல்லாமாய், எவ்வுயிரிடத்துங் கலந்துத் திருவிளையாடற்செய்துவரும் பெருமானே! உண்மைத் திருத்தொண்டர்களும், பெத்தமுத்த சிவேஸ்வரர்களும், மேலான ஞானமாகிய புத்தியையுடைய மஹான்கள் தேவரீருடைய வலியின்றி எந்தப்பொருளு மியாதுஞ்செய்ய முடியாதென்பதாக சாதனமாக வெடுத்து ஸ்தாபித்துள்ளார் அவை; சத்தியந்தானென்பதை சதாகாலத்து நிலைநிற்க அழியாத ஆஸ்பதமாக புண்யத்தின்படி மானிடவவதாரமெடுத்து உலகமெங்கணும் புகழும், பக்தியும் அளவளாவி நிலைப்பெற்றோங்க (சமயாச்சாரியராகிய நால்வருள்;

§ திருஞான சம்பந்த சுவாமிகள்.

அரவந்தீண்டிமடிந்த வணிகனுக்குயிர்க்கொடுத்து அவனுடன் வந்திருந்தப் பெண்ணை கலியாணஞ்செய்து வைத்தார், தமிழ் வேதமாகிய ஓலையை நெருப்பிலிட்டபோது அவ்வோலையைப் பொன்னாக்கினார் வேதமாகிய ஓலையினால் ஆற்றினைக் கட்டினார், சைவத்தை மதியாது மேற்கொள்ளுவதாகிய வீண்வாது செய்த சமணருடைய வேதமாகிய ஓலையை (ஓலை வாளையாக்கினார்) மந்திரி குலச்சிறை நாயனாரால்: எண்ணாயிரஞ்சமணரை உயிர்க்கழுவேற்றப்பட்டது, மறைக்கதவத்தைத் திறந்தார், (சாணுலய முனிவரால் புத்தநந்திதலை யிடறச்செய்தது) ஆண்பனை பெண்பனையாகிக் காய்க்கவும், திருமயிலை சிவநேசச் செட்டியார் குமாரத்தி பூம்பாவை கர்ப்பகவல்லி யம்மைக்கு பூப்பறித்தகாலத்து பாம்புத்தீண்டியிறந்து காஷ்டஞ் செய்யப்பட்டிருந்த எலும்பை அங்கம்பூம்பாவையென வுயிர்பெறச் செய்தார்.

§ திருநாவுக்கரசு சுவாமிகள்.

தாய்தந்தையரனுசரித்துவந்த சுத்த சன்மார்க்கமாகிய சைவசமயத்தைவிட்டு புறச்சமயமாகிய சமணமார்க்கத்திலே பிரவேசித்து கற்றுவல்லவராகி புத்தரை தர்க்கவாயிலாற் கெலித்து; தருமசேனரென்றப் பெயரடைந்து அச்சமணமந்திரத்தாற் நீர்க்கப்பெறாத சூலைநோயடைந்து தனது அப்பியாராகிய திலகவதியாரால் பூசப்பட்ட திருவெண்ணீறாற் சுகமாகி பதிகம்பாடி திருநாவுக்கரசரென திருவதிகைவீரட்டானேசுவரராற் பெற்று, சமணர் துர்ப்போதனையா லரசனாக்கினையின்படி; கொடுக்கப்பட்ட விடத்தைப் பொசித்தும், நீற்றறையிற் சுகமாயிருந்தும், கொல்லும்படி விடப்பட்ட யானை; தன்னைவணங்கி சமணக்கூட்டத்தை யழிக்கவும்

சமுத்திரத்திற் கட்டிவிடப்பட்ட கல்லானதுத் தெப்பமாகிக் கலரசேர்க்கவும், ரிடபம், சூலம், தோளிலடையாளமாகப் பெற்றும், (திருநாவுக்கரசு சுவாமிகளைக் கண்கண்ட அற்புத குருவாகவெண்ணி அவர்பேரால்; ஆலயம், மடம், அன்னசத்திரம், நந்தவனம், இவைகளுடன்; தனது மனைவி மக்கள், ஆடு, மாடு, ஆள்முதலியவைகளையும் அப்பெயராலழைத்தும், ஸ்தாபித்துவருகின்ற அப்பூதி நாயனரின் குமாரனுகிய பெரிய திருநாவுக்கரசன், அமுதுபடைக்க; தலைவாழையிலைக் கொய்தபோது அரவந்தீண்டியிறக்க அன்னவனுயிர்ப்பெற்றெழவுஞ்செய்தார்.)

§ சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

கைலாயத்தின்கண்ணே நந்தவனத்திற்கண்ட கமலினி, அனிந்திதையென்னும் இரண்டுப் பெண்களால் ஆரூரில் சனித்து, சேரமான்பெருமாளுயனுரால் வளர்க்கப்பட்டு; முதல் மணத்தில் பரமசிவமே கைலாயத்திற் சொன்ன வாக்கின்பிரகாரம், பிராமணராக யெழுந்தருளித் தடுத்தாட்கொள்ளவும், பித்தன் பேயனெனப் பாடும்படி அருட்பெற்றும், பரவைநாச்சியரிடம் பரமசிவந் தூதுசெல்லவும், மணிமுத்தா நதியிற் போட்டப் பொன்னைத் திருவாரூர்க் குளத்தில் மூழ்கியெடுக்கவும், அவிநாசியில் முதலையுண்டப் பிள்ளையை வருவித்துங் கொடுத்தார்.

§ மாணிக்கவாசக சுவாமிகள்.

வரதுங்கபாண்டியனிடத்தில், மந்திரிவேலைச்செய்து அப்பாண்டியனுல் குதிரை வாங்கும்படிகொடுத்த பணத்தை; திருப்பெருந்துறையில் ஆலயமமைத்தும், சிவப்பெருமானே குருமூர்த்தியாக வரப்பெற்றுந் தமிழ்வேதமாகிய திருவாசகத்தை யெழுதி, அம்லவாணனென கைசாட்டுவைத்துக் கொண்டாடச்செய்தும், வைகைப் பெருக்குறவும், பிட்டுக்கு மண் சுமக்கவுங் காட்டிலுள்ள நரிகளானது பரிகளாகவும், வாதுக்குவந்த புத்தர்கள்கேட்ட கேழ்விக்கு செழியன் மகளாகிய ஊமைப்பெண் வாய்திறந்து பதிற்சொல்லும்படியாகவுஞ்செய்தார்.

இவ்வித மஹா அற்புதங்களை முடித்து எல்லாச் சமயங்களுக்கு மேலானதும், உண்மையுள்ளதுமான சைவசமயத்தை யெங்கும் விளங்கும்படி செய்தும், ஆன்மாக்களாகிய சீவர்கள் கடவுள்தன்மையை விசாரிப்பதில் இதுவோ. அதுவோவென்னுஞ் சந்தேகத்தை நிவர்த்தித்து (சைவத்திற் மேற்சமயம் வேறில்லை) என்னுந் திருமொழியை சாட்சிமாத்திரையாக ஞாதுரு, ஞான, ஞேயம், ஆகிய இவைகளுட் பிழம்பான நிரதிசயானந்த சுயஞ்சைதன்யபோகத்தை அநுக்ரஹித்தார்கள் பிர்மாவின் கபாலமாகிய மண்டையோட்டைக் கையிலேந்திய பரமசிவமே! என்பதாம். (உஉ)

மஹாத்மாக்களென்னும் பெயர்மருவிய பூர்வீகப் பெரியோர்கள் சமயநிலைக்கே; தன்னையும் பொருளையும், ஆவியையுந் தத்தஞ்செய்தார்களென்னும் பேரறிவுடைய அன்பை அன்னவர்கள் சரித்திரங்களால் நன்கு விளங்கும். ஆனால்; படாடோபத்திற்சிக்கி தற்சிறப்புவேண்டி சமயநிலையசன்றாரின்றென யெளிதிற் புலப்படும்.

தோற்றமு மொடுக்கஞ் சொந்த மன்னியமு
நாற்றமு மணமு நன்மையுந் தீமை
‡ வேற்றுமை யொருமை விளங்கிட வுடலின்
காற்றுப்போ முனஞ்சொல் கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை.) உலகினிடமாக சனித்துள்ள ஆன்மாக்கள் அதனதன் பயனையே மேற்கொண்டு வருதலும், ஒன்றிலொன்றடங்கலும் நிலையற்றதும், இடிகரையுமான அனித்தியதேகத்தை வாளாய்ச்சுமந்து வீண்காலம்போக்கி (சடாதமண் குழந்தை; சட்டமண் இச்சையின் வழியாற் பாபத்தில் பற்றுடன் வயதேறியவர்கள்) மண்ணுக்கு என்னென்றே பொருத்தமில்லாதப் பொய்ப்பெயரை வைத்துக்கொண்டதும் போதாமல் இவர்தான் எல்லாவற்றிற்குஞ் சுதந்தரமுடையவர், இவர் எந்தவகையிலும் எவைக்கும் பாத்தியமற்றவர் எனவும்,

வாசனைகளிலே பரிமளமான சுகந்தமின்னது; பார்க்க, மூகர மனமொப்பாத கெட்டவாசனை யின்னது, இதனைக் கையினாற்றொடப்படாது ஒருக்கால் ஏதோ தெரியாமல் தொட்டுவிட்டால், தொட்டகை அதுவரையினும் அழுகிப்போம் (குரங்கின் சேட்டையும் புத்தியும்) என்றும் (தாழ்ந்தவர்களாகிய இவர்களுக்கும், வானத்திற்கும் பூமிக்கும் உயர்ந்தவர்களாகிய நமக்கும் எத்தனையோ பேதம் எந்தவகையிற சரியொத்தவர்களாவார் எனவும், இவைகளை யொருசிறிதும்வேண்டாது; (சர்வம் சிவமயம்ஜகத்) என்னும் அரும்பெருந்திருமுறையான வாக்கியத்தை நன்குணர்ந்து உண்மையாகிய சத்தியத்தைக் கைக்கொண்டு யாவருஞ் சுக்கில சுரோணிதச் சம்பந்திகள்தானே எனத் தன்னைப்போ லெல்லாரையும் நேசித்து ஒற்றுமையுடையவர்களாய், அன்பென்னுங் கயிற்றாற்கட்டப்பட்டு; (ஏகயோனி பிரசூதத்வா ஏக சகோதரா:) என்பதொப்ப யாவரும் ஓர்தாயின் பிள்ளைகளாதலா லியாவருஞ் சகோதரர்களாக யாதொரு பேதமில்லாது, நற்குணமும் நிறைந்து விளங்காநின்ற இத்தவுடலிற் சீவனாகியிருந் தியாவையும் உள்ளபடி காத்து வருகின்ற பரமரட்சண்ய மூர்த்தியே! என்னுடலுக்காதரவாக யிருக்கின்ற வுயிரானது மோசஞ்செய்து யாதுஞ்சொல்லாது ஒழிந்துபோவதற்கு முன்னரே பாபகிருத்தியனாகிய வடியேன் தேவரீருடைய திருவடிக்காளாகும்படியான வுண்மைப்பொருளாகிய ரகசியத்தை

அந்தரங்கமாக என்மனதுள் வயப்படும்படியாக உபதேசிக்கவேண்டும் பிர்மாவின் கபாலமாகிய மண்டையோட்டைக் கையிலேந்திய பரமசிவமே! என்பதாம். (உசு)

‡ ஆண், பெண்ணென்ற இருவகை இவற்றுளும், (இட்டார் பெரியோ ரிடாதாரிழிகுலத்தோர் என்னு நீதிமொழியுணர்ந்தும்) வேற்றுமையென யெண்ணுவோர் அறிவிலிகளென்பதாம். (பிரிவினை யென்பது பேய்க்குணமென்பதே நிச்சயம்) இதனுடன், ஒன்றையொன்றுத் தொடுதல், ஒன்றையொன்றுத் தொடாதிருத்தலென்பது: பெருமயக்கமும் விசாரணையுடைய புத்திசாலிகளுக்கு வெறும் பொய்யாகவுந்தானே முடியும். எங்ஙனமெனின்; சருவ பதார்த்தமும் ஒன்றிலொன்று வியாபகமாகயிருக்கின்றனவேயன்றி; ஒன்றேனுந் தனித்து நின்றதாகச்சொல்ல யாதோராதரவும், உபாயமும், வஸ்துவும் எவ்விடத்துங்கிடையாது. அப்படியெண்ணுவது; சிருஷ்டிக் கர்த்தாவாகவும், சீவனாகவுமிருக்கின்ற பரமசிவத்திற்கும், வேதங்கட்கும், ஞானிகட்கும், சமயத்திற்கும் பெரும் இடரையுண்டு பண்ணி நரகத்திற்குப் பாத்திரவான்களாவது மெய்யென வேதமுடிவு.

வெளிப்படை :— மண்ணைத் தண்ணீரும், காற்றும், நெருப்பும், கலவாமற்போனால், கல்லாவதில்லை. கண் பார்த்தல், வாய்ப்பேசல், மூக்குமுகரல், கை வேலைசெய்தல், கால் நடத்தல், தேகமிவையாவையுங் கொண்டிருத்தல், என்பதெதிருற்றதெனுங் காட்சிப்பொருள்களாம்.

இவைகளிலியாதேனுங் குறைந்திடின், குறைந்தவவைக்கேற்ற ஊனமுண்டாகும் (மெய், வாய், கண், மூக்கு, செவி,) உடைத்தானதும் அறிவிற் பஞ்சவறிவுடன் ஆறுவதறிவாகிய உண்மையையறிகின்ற பகுத்தறிவாகிய ஞானம் அமைக்கப்பெற்றது. (ஒருவரையொருவர்ப் பார்க்கின்றபோது பார்வையி னுள்ளிருந்து காட்சிப் பிரமாணம் வெளிப்படுகிறது இவையில்லாது; குருடனெனவும், வாயின் சப்தமாத்திரையால் நாதமானது மனது நினைந்துள்ளதை வெளியிடுகிறது. வெளிப்படும் வார்த்தையானது ஒருவர்க்கொருவர் கேட்டலுங் கேட்டதற்கு பதிற்சொல்லுதலும் தேகமாகியத்தோலைத் தொடாததாகயெண்ணுகின்றதேயன்றி; சீவனாகிய ஆன்மாவையே கலந்து தொட்டுக்கொண்டோமென்பதை அறிவுடையோரன்றி மற்ற சாமான்யர்களறியுந் திறமின்றென்பதே விளக்கம்.

பார்வையினாலும், ஒன்றுக்கொன்றுள்ள இச்சையானது வெளிப்படையாக வுண்டுசெய்து அளவுபடாத காரியங்களில் விர்த்தியாகின்றதே சான்றும். மூக்கானதும் நன்மணத்தை முகர்வதும், துர்மணத்தைமுகர வெறுப்புக்கொள்ளுதலேயன்றி; தன்னிடத்திலுள்ள கெட்ட நாற்றத்தை

கண்டிருந்தும் நீக்கிக்கொள்ள முடியாதன்வாகவே காண்கிறது.

இவைகளையாதரித்தே; "சுவையொளி யூறுவோசை காற்றமைந்தின் வகைதெரிவான் கட்டே யுலகு" எனப் பெருந்தேவனாரும், "பெற்றமு மெருமையும் பேதமானாற்போல் மனிதரிறபேத வடிவெவர்க் கண்டுளார்" எனக் கபிலதேவரும், மற்றுஞ் சரித்திரங்களாலும் எடுத்தோதப்பட்டது.

ஒன்றையொன்று சதா தொட்டுக்கொண்டிருப்பதனாற்றான் பிரபஞ்ச விருத்தி; அப்படித்தொடாது அதாவது, கலவாதுநின்றால் உலகமில்லை அதைத்தான் பற்றற்றநிலை, வெறும்வெளி, பாழ், எனப்பலவாறு வேதங்கள், முமூட்சுகள், பெத்தமுத்த சிவேஸ்வரராகிய சித்தராதியர் கூறுகிற்பர். அவையிடத்தும் யாதுமற்ற சூன்யமென்ற தொன்றிருப்பதாக வுண்மைப்போதரும்.

பற்றென்ப தெலாம் பறந்தார்ப் பிழைப்பேன்
சொற்சோர் வுபடச் சூழ்ந்தேன் றாழ்ந்தேன்
குற்றம் பொறுத்தார்க் குணமிங் கடைவேன்
கற்றோர்க் கண்ணே கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) பலசன்மங்களாகப் பிடித்து வாதியாகின்ற மலக்குப்பையானதற் காதரவும், ஆகாரமுமாகித் தவிக்கும்படிச் செய்து, வீணேகெடுத்து எட்டுணையுங் கடைத்தேறும்படியான சன்மார்க்கமில்லாது பாபத்திற்குத் தலையாகவிருக்கின்ற ஆசாபாசங்களானது (ஆயிரங் காக்கைக்கோர் கல்) என்பதாக (ஒருசொல்லதனா லுலகம் பிழைக்கும்) எனுஞ் சௌந்தர பரணியின் கருத்திற்கிணங்க; தேவரீரனுக்ரஹஞ்செய்யுங் குருமூர்த்தியினாலும், அல்லது; தேவரீர் அந்தரார்த்த கருணையாகிய மனோவிஞ்சை, மனோலயம், மனோதியானம், மனோகியானம், மனப்பூர்வகம், மனநோக்கம், மனப்பற்று என்னும் ஆசார அனுட்டான விரதானுகூல பக்தி இவைமுதலாய தற்சொரூப மனக்கொள்கையினிடமாக தினையளவு, மணலளவு, கடுகளவு தயைசெய்தால்; இருந்தவிடந்தெரியாது வொழிந்துப்போன பொருட்குச் சமானமாய்; நெருப்பில் விழுந்திறந்த விட்டிற்பூச்சியைப்போலவும், வேகமடங்கிய ஆடியைப்போலவும், விட்டு நீங்கும் அப்படி அஞ்ஞான மாய்கைக் காரியத்திலிருக்கின்ற சிந்தையானது, தேவரீரின்பேரிற் கிஞ்சித்திருந்தாற் றலையெடுப்பேன். இந்த நெறியாதுமில்லாததனால் அடியேன் வெளிப்படை வார்த்தைகளிற் சிறப்பில்லாது மனத்தாழ்வடைந்தேன். ஆனால்; வியாகுலத்தைக்கொண்டேன் இதனாலுண்டாகாநின்ற பெரும் பிழைகளை மன்னித்து-ஆதரித்தா லும்மையணுகும்படியான பேரறிவைப்பெற்று நன்மைக்காளாகுவேன் உண்மை

ஞான நூற்களைப் படித்த மெய்யன்பர்க ளுள்ளத்தி லுள்ளதையெடுத்து விளக்கும்படியான ஞான நேத்திரமே! பிர்மாவின் கபாலமாகிய மண்டை யோட்டைக் கையிலேந்திய பரமசிவமே! என்பதாம். (உ௪)

எல்லா நினைதென் றெண்ணேன் பண்ணேன்
வல்லாண் மையினல் மரிப்பேன் சிரிப்பார்
உல்லாச மெலா மொழியுங் குழியிற்
* கல்லாக்கி னலங் கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) என் கண்ணுக்குப் புலப்பட்டிராநின்ற சருவப் பொருளுந் தேவரீருடையதாக கிஞ்சித்து மெண்ணமாட்டேன், அப்படி யெண்ணுமற்போயினும், (படைத்தான் படைப்பை யெல்லாம் மனுவுக்காக, மனுவைப்படைத்தான் றன்னை வணங்க) எனும் முதுமொழியைச் சீர் தூக்கிப் பார்த்து, அவ்வார்த்தைக்குத் தாழ்வை யுண்டாக்காமற் படி ஸ்ரீபாதங்களைச் சதாசிந்தித்து பூசைபண்ணமாட்டேன். என் வயதுக்கும், நேர்ப்பட்ட கௌரவத்திற்கும், செல்வத்திற்கும், என்னை தற்புகழ்ச்சிசெய்யும் உறவினர் முதலாயக் கேளினர்களோடு தானென்றவாண்மையினுற் கர்வித்து; சன்மார்க்கநெறி, தெய்வவூழியமாகியத் திருப்பணி, சான்றோராகியவுத்தமர் ஸ்நேகம் இவைகளி லொன்றிலேனுங் கலவாது, (கண்டதே காட்சி கொண்டதே கோலம்) என வீணுடம்பர பிலுக்கிலதிகரித்து; வினையின்படியே சாவேன் (செத்துப்போவேன்) அக்காலத்தில்; வைத்துப்போகுஞ் செல்வத்திற்கருகராவாரியாரோ? அன்னவர்; பிணத்தை வெகு ஆடம்பரமாகத் தூக்கிச்செல்ல அத்தருணங்கண்ட வறியவர், குடும்பமற்றவர், (கன்மிக்கு கனத்தைப்பாருங்கள் ஈயாலோபிக்கு ஏற்பட்ட சிறப்பைப்பாருங்கள் பாபிக்கு; புட்டும் மேளமும் பாருங்கள்! ஒருதன்மமுஞ்செய்யாது சேர்த்துவைத்ததில் ஒன்றுங்கூடக் கொண்டுபோகவில்லையே ஐயையோ! என்றுப் பின்னிருந்து கைக்கொட்டி கெக்கலிப்பார். இறந்தவனுயிரோடனுபவித்த எல்லாவாடம்பரங்களுங் குழிமூட மண்தள்ள பிணம் மறைந்துப் போவதைப்போல அக்குழிக்கு ளடங்கிப்போய்விடும். அப்படி; அடியேனுடைய தேகம் மண்ணுக்குட் புதைந்து விடுவதைப் பார்க்கினும், தேவரீருடைய ஆலயசதிலொரு படிக்[illegible]கல்லாகவாவது, திருக்குளத்தின் படியிலொரு கல்லாகவாவது, சிருஷ்டித்தால் [illegible]த்தவுநன்மை ஆலயத்திற்கு வருகின்ற அடியார்களுடை பாத தூளிதத்தினல் [illegible] ஒருக்காலெனக்கு பாபவிமோசன முண்டாகும், அடியருடன் தேவரீருமெழு[illegible]ந்த ருளநேரிடும் அக்கால் சிவபெருமானே! உம்முடையப் பாதங் கல்லாய்க் கிடக்குமென்பேரிற்படின் வேறுமுத்தி யெனக்கேன். அழிகின்ற தேகத்தைப் பார்க்கினும், அழியாதிருக்கின்ற தெத்தனை பாக்கியம். பிர்மாவின்

கபாலமாகிய மண்டையோட்டைக் கையிலேந்திய பரமசிவமே! என்பதாம். (உ௫)

---

* கல் கரையாப்பொருள் அதைப்போலக் கடவுள் குறைவுபடாத நிறைந்தசொரூபமாய் அன்ப ரகத்தைவிட்டு நீங்காது; அதாவது அசையாதிருப்பர் என்பதுப்போதரும்.

" கல்லினுஞ் செம்பிலு மிருப்பானெங்கட் கண்ணுதலே " என்ற பட்டினத்தடிக ளரும்வாக்கியமுடைத்து. மார்க்கப் பற்றுகளில்லாப் பாமரர் கடவுட் கல்வி லிருப்பானோவென; யிகழ்ந்துரைப்பார்க் கென்செய்யலாம் அன்னவர், (சிவலிங்கத்தில் மார்க்கண்டேயருக்காக வந்ததும், சாய்ந்திருந்த லிங்கம் கலயநாயனருடைய பக்திநிறைந்து பூநூலால் நிமிர்ந்ததும், அந்தரங்கத்தில் பூரண விசுவாச பக்திநிறைந்தும் வெளிப்பார்வையிலே உண்மைத்தெரிந்தால் தன்னினத்தாராகிய புத்தர்கள் அடித்துக்கொல்லுவாரென்றஞ்சி மனதிலே புட்பமாக நினைத்து; சிலையைக் கல்லாலெறியப்பட்ட சாக்கியபுத்தருக்கு காஞ்சிதந்ததும், சமணர்கட் கட்டுரையானது தலையெடுக்காதுநசிக்கத் திருவாலவாயென்னும் மதுரையில் கல்லாற்செய்துள்ள யானைத்தன் வாயைத்திறந்து கரும்புத்தின்றதும், கற்பசுவானது பால் சுரந்ததும், கைலாயத்திலிருந்து கொண்டுவந்த லிங்கமானது பசுவின் காதைப்போற் குழம்பி கோகர்னமெனப் பெயர்ப்பெற்றதும், ஸ்ரீ ராமர் மணலாலமைத்து வணங்கிய லிங்கத்தை; ஆஞ்சநேயராலெடுத்தப்புறம் வைக்கமுடியாது தனதுவாலறுந்ததும், காஞ்சிபுரத்திற் காமாட்சியம்மன் ஆற்றின்மணலை லிங்கமாக்கி பிறகிப் பிடித்துக்கொண்டக்காலத்து வெள்ளமணைந்தப்பின் சத்திசிவவடிவமொன்றாக விளங்கினதும் என்னறிவாரென்பது உள்ள சித்தாந்தம்.

ஆயிரத்தெட்டு சிவலிங்கமாக ஸ்தாபிதமாயினும் பலகோடி க்ஷேத்திரத்தில், அடியாருடைய பக்குவத்திற்கும் அன்புக்குமேற்ப பலகோடி மூர்த்தமாக யெழுந்தருளியிருப்பதே சான்றாம்.

" கண்ணிற் காண்பதுங் [illegible]ாட்சி கையாற்றொழில்
பண்ணல் பூசை [illegible]கர்வது மந்திரம்
மண்ணோ [illegible]டந்தும் வழங்குயிர் யாவுமே
அ[illegible]ணலே நின் னருள்வடி வாகுமே " என்றார் சைவப்

பிரசாரணரா[illegible]கிய தாயுமான சுவாமிகள்.

சிவசிவ வென்றத் திருநீ றணியேன்
பவரோ கமதைப் படைத்தேன் கிடைக்க
தவமொன் றுமிலேன் றற்காப் பவரியார்
கவனித் தருட்செய் கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) பசு, பதி, பாசமாகிய மூன்றினுள்; பாசமாகிய பூர்வ வினையை, பசுவென்னும் ஆன்மாக்களாகிய சீவர்கள் விட்டொழித்தாற்றான் பதியாகிய இறைவனென்னுங் கடவுளோடு இரண்டறக் கலந்து பிறப்பிறப்பற்று சுத்தாத்மாவாக சூக்மதேகியா யென்றுமொருபடித்தாயிருக்கமுடியுமென திருமொழியாகிய வேதமுங் குருமொழியாகவுபதேசமும் நிச்சயிக்கப்படும். இந்நிலையடைவதற்கு சமயநெறி யுடன்பாடாநிற்றலாலும், அச்சமயமானது சைவமென யேற்படலானும், அச்சைவத்திற்குரிய அடையாளமும், பஸ்மமும், செல்வமும் திருமேனியும் சன்மநோய்க்கு ஔடதமும், இன்னும் அவ்வவ்வவசரத்திற்கு வேண்டியவெலாங் கொடுக்கக்கூடிய பரமசாதன சஞ்சீவியாகிய விபூதியை, அறுகாலபூசை, திரிகாலபூசை, சதாகாலபூசையாகத்தானே நிர்ணயித்து பலகோடி மந்திரத்தோடு ஆராதித்து பூசுவதற்கருகனாக சமயம் வாய்க்காவிடினும்; நிமைநேரமாவது மனதொன்றாக கவலையற்று சிவசிவ வென்று சிந்தையெண்ண அதே நிலையாக வாய்விட்டுசொல்லி பூசமாட்டேன், பாபமாகிய நோய்க்கொண்ட அசங்கத தேகத்தை யெடுத்தேன் எடுத்தப் பிறவியிலேயே ஸ்ரீபாதங் கிடைக்க நினன்பரைப்போல யாதொரு சாதனையுஞ் செய்தில்லேன். எந்தவகையிலும் நன்மையில்லாத சண்டாளனாகிய நான் உலகவாதனைகளை பசியின்பொருட்டும், மனவிருப்பத்தின் பொருட்டும், அனுபவித்துவந்தாலும் முடிவான காலமாக யெனக்கேற்படுத்தியிருக்கும் மரணவாதனையின் துன்பத்தைத்தாங்க வலியின்றி, சேத்துமக்காரனிடங் கட்டுப்படுமுயிரை அவனிடமிருந்து மீட்டு ஆதரிப்பவருன்னையன்றி யாரிருக்கின்றார்கள்? ஒருவருமில்லையே; எனைப்பெற்ற பரமதகப்பனே! அடியேனுடைய மனம், வாக்கு, காயம், இம்மூன்றினையுந் தெரிந்தாதரிப்பவநீயாதலால், கடையேனாகியயான் கடைத்தேறும்படி கியாபகம் வைத்துத் திருவருட்சுரக்கவேண்டும், பிர்மாவின் கபாலமாகிய மண்டையோட்டைக் கையிலேந்திய பரமசிவமே! என்பதாம். (௨௬)

இதையனுசரித்தே "ஒருகாலமன்றி சதாகால பூசையாய்" எனலும் "கருவிகரணங்க ளோய்ந்து கண்மூடி யொருகண மிருக்கவென்றாற் பாழ்த்த கன்மங்கள்போராடுதே" எனவும் ஸ்ரீமத்-தாயுமான சுவாமிகள் கருத்து.

தந்தோந் தந்தோந் தந்தோ மெனமுன்
வந்தார்ப் பிழைப்பேன் மதி சூடியவா
சிந்தா குலத்தைத் தெரிந்த தெய்வமே
கந்தன் றந்தையே கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) எனது ஊழ்வினையின் வலிமைப் பிர்க்காரம்.

சுக்கில சுரோணித் சம்பந்தத்தின்படி தாய்க்கருவிற் சனிக்கும்படியமைத்து ஒருவருடையக் கண்ணுக்குப் புலப்படாத, அந்தரங்கமான கருவீட்டில் அன்னையானவள் சாப்பிட்ட ஆகாரத்தை எனக்கூமூட்டி வளரச்செய்து, பத்துமாதஞ் சரிவர வெளிப்படுத்தி அங்கவீனமின்றி வயதேற, அவ்வயதுக்கேற்ற சுகாசுகங்களை யனுபவித்து அவைகளாலுண்டாகும் இன்பதுன்பத்திற்கீடாகத்தானே நரை, திரை, வினை, மூப்பு, வந்துசேர இவைகளின் முடிவாகிய சாக்காடுவருமே; இச்சத்தியமான வார்த்தையை மறுப்பவரியார்? ஆதலால்; அவ்விதயிடுக்கணுன முடிவையடைவதற்கு முன்னரே, தேவரிருடைய திருக்கருணைக்குப் பாத்திரவானுகும்படி கருணையைக் கொடுத்தோம், கொடுத்தோம், அஞ்சவேண்டாம் மகனேயென்றுதரிக்கும்படியான வார்த்தையைச் சொல்லி; அடியேன்முன்னந் தோன்றினுற் றலையெடுத்துப்போவேன் சந்திரனைச் சடையில் வைத்துள்ளவனே! துன்பநிலைமையாவையுஞ் சரிவரக்கண்டுள்ளக் கடவுளே! சரவணப்பொய்கையில் வளர்ந்து உமாதேவியினுலே பாலூட்டி (பரிமளமுள்ளான்) கந்தனென அழைக்கப்பெற்ற சுப்ரமண்யப்பெருமானின் தகப்பனே! பிர்மாவின் கபாலமாகிய மண்டை யோட்டைக் கையிலேந்திய பரமசிவமே! என்பதாம், (உஎ)

ஒழியா துக்க மொழியா வினைக
ளழிவேன் றனக்கே னமைத்தா யப்பனே!
செழிப்பே னழிப்பேன் செய்தித் தெரிவாய்க்
கழும லகற்றுங் கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) அன்னை வயிற்றிலிருந்து வெளிப்பட்டநாள் முதற்கொண்டு இற்றையவரையினும், இரவுபகலெனைவிட்டு நீங்காத துன்பத்தையும்; பிணி முதலாகிய திராக்கன்மத்தையும், இப்பொழுதோ இன்னுஞ்சற்று நேரத்திலோ, எந்தயிடத்திலோ, எவ்வேளையோ, யாதொரு பேச்சுமூச்சின்றி, இருக்தயிடமறியாது ஒழிந்துப்போகும் அற்பதேகமாகிய ஊத்தைநிறைந்த கடைப்பிணத்தை யாதுப் பிரயோசனத்திற்காகவுண்டுச்செய்தாய்? என்னைப்பெற்ற தந்தையாகிய சிவபெருமானே! கன்மபந்தத் தோற்றத்தின்படி ஒருவேளை விருத்தியடைவேன் அவ்விருத்தியின் பயனுகக் கிடைத்தசெல்வத்தை; பலவித ஆடம்பரமான வீணுவாரத்திலே ஒழித்துவிடுவேன் என்னுடைய கதியனைத்தும் மறைவானதல்லவே உள்ளவிஷயமறிந்ததன்றோ? இங்ஙனமிவ்வித பெருந்துன்பத்தில் நசுங்குண்டுகிடக்கும் பழிநிறைந்த பிடுக்கணைநீக்கி யாண்டருளும் பரமவாரிதியே! பிர்மாவின் கபாலமாகிய மண்டை யோட்டைக் கையிலேந்திய பரமசிவமே! என்பதாம். (உஅ)

எங்கா கினுங்கை யேந்தி பொசித்து
மங்காத் திருவருண் வாய்ந்துவாழ்ந் தனுடன்
றங்கி யிருக்கத் தயைசெய் சங்கரனே!
கங்கா தரனே கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) சருவசிவ சரண்யனான கிருபாகரமூர்த்தியே உலகபாச பந்தமாகிய வினைச்சூராவளியி லகப்பட்டும், அதனது வேகத்தினால் மோதப்பட்டுந் தாங்கற்கரியத் தீச்செயலைச் சுமையாகக்கட்டித் தலைமேற்சுமந்து இதக்கமாக அப்பாரத்தை யிரக்குவாரின்றி சதாகாலத்துமிது வொரு பெருக்தொழிலாகிய வியாபாரமாக பாபச்சரக்கை; அதனால் விளையுந் தீர்ப்பலனை யறியாதாரிடம்விற்று, காமக்குரோதமத லோபமாச்சரிய மென்னும் மாயதனத்தை யடைந்து இறுதியிலியாதாமொரு ஊதியமின்றி நசுங்குண்டு மறைந்துப்போவதினும், இவ்விதப் பழியென்பதில்லாது சுத்த மனத்தையுடையவனாய், நல்லாரிணக்க மடைவான்வேண்டி பசிவந்தபோது பிச்சைவாங்கித்தின்று கும்பியினனலைத் தணித்துக்கொண்டு, நினையுநேரமெல்லாந் தேவரீருடையப் பிரகாசமுடைய பேரறிவெனும் பெருங்கருணைக்கிடைத்து அவ்வழியே; மனமும் நிலைப்பெற்று, பாலிற் சுவை கலப்பதைப்போல தேவரீருடைய நிரதிசயானந்த மெய்ஞ்ஞானத்துடன் கூடி யென்றுமழியாத வொருபடித்தாயிருக்கும்படி கருணைப்புரியவேண்டும், அனைத்தினையு மதனதன் கன்மத்தினுக் கேற்றவிதம் அழிக்கின்றவனே! சடையிற் சலத்தையும், நெற்றியிற் சூரியனாகிய கண்ணையுமுடையவனே! பிர்மாவின் கபாலமாகிய மண்டை யோட்டைக் கையிலேந்திய பரமசிவமே! என்பதாம். (உக)

தெய்வ வழியிற் சிறந்தார் நல்லோர்
பொய்ச் செய்கையினிற் புகுந்தேன் வருந்தேன்
மெய்ப் பட்டமெலாம் விமலா வுமக்கே
கைப்படின் சுகமே கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை.) நன்மைநிறைந்த சர்க்குணமுடையப் பெரியோர்கள், தாங்களெடுத்த சன்மத்திலேயே பயனாகிய முத்தி யென்னும்; இரண்டற்றவானந்த சுகத்தை யடைவானுன்னி, மும்மலங்களை எட்டுணையும் விரும்பாது எப்பொருளிடத்தும் பற்றென்பதில்லாமனீங்கி; கடவுட்டிருப்பணியின் மார்க்கத்தில் வழிப்பட்டு; நேர்மையுற்றார். அச்சன்மார்க்கநெறியி லொருசிறிதுமில்லாதப் பாபியேன் அந்நிலைக்கருகனாகாது அபத்தமான அனியாயக் காரியத்திற் சிக்குண்டேன், இவ்வித சத்கருமத்தை கையறவிட்டு, மலைத்துவகங்கரித்திருக்குந் தீர்ச்செய்கையைப்பற்றி கிஞ்சித்துந் துக்கப்படமாட்டேன், ஆன்மாக்களாகிய சீவர்களுடையப்பெரு

நின்ற எவ்விதமகிமைப் பெயர்களெலாந் தேவரீருக்கே வுரித்தாகும், அம் மேரையானச் சிறந்த கௌரவநாமமனைத்து மெனக்குரியதென: யெண்ணுவதற்கு சமானமான வறிவின்மை வேறின்றெனவநுபவிகள் மூக்காலு மொப்புவர். என்னெனின்; என்றேகம், வாழ்நாள், கன்மசஞ்சிதம், பிறப் பிறப்பு, புகழ்ச்சி, இகழ்ச்சி, இவையனைத்துமே எனக்குப் போதமான கஷ்டத்தை விளைவித்துக் கொன்றுவிடலால், எப்பெயரும் பொருந்தா தெனவுள்ளக்கிடை. ஆதலின்; சருவசுதந்தர வாச்சல்யனாகியக் கடவுளே! உன்னுடைய ஞானமணங் கமழாநின்றக் கரமானது என்மேற்பட்டதேயானால், அதுவே எல்லா நன்மையையுங் கொடுக்குமென்பதனால்; ஆண்டவனே! உமது கரத்தை திக்கில்லாத ஏழையின் முடிமேல்வைத்து ஆசீர் வதிக்கிற் பிழைத்துப்போவேன். உம்மை நம்பியிருக்கின்ற வெனக்குண் டாகுஞ் சீர்த்தியெல்லா முமக்கே பெருமையுடைத்து, அவைகளும்மையு டைத்தென்பதே போதரும். பிர்மாவின் கபாலமாகிய மண்டையோட் டைக் கையிலேந்திய பரமசிவமே! என்பதாம். (௩௰)

§ அறுபான் மூவ ரன்பு மற்புதம்
வெறுப்புற் றவர்கண் விளங்கிய விஞ்சையு
மறுத்த வஞ்சகர் மடிந்த துங் கண்டங்
கறுத்த நின்செயற் கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) எல்லாவிதப் புண்ணியங்களுந் திரண்டோருருக்கொண்டு வந்ததெனவுஞ் சன்மங்களிற் படிப்படியாக விடாதுப்பின் பற்றித் தொட்டுக்கொண் டிருக்கின்ற வாசனையின் வல்லமையை யெவ்வாற்றினும் முன்னேற்றத்தையடையாது கெடுக்கக்கூடிய பத்தியையே; முத்திக்குடையதெனவும், திருநீறு, ருத்ராக்கமணிதல், பஞ்சாக்கரமோதுதல், ஆலயப்பணி விடாது நடத்தல், அடியார்களைத் தம்போன்ற சாமான்யமாக யெண்ணாது (சிவமேயென) நினைந்து வந்தனைவழிபாடுச் செய்தல், மனம், வாக்கு, காயம், இவை மூன்றும் பொருந்த வணங்குதல், காணப்படுகின்ற சருவ வுருவங்களும் சிவமெனக்கருதி ஒன்றிலேனும் மனப்பேதமாகிய அஞ்ஞானக்குணமின்றி; வெளுத்ததெல்லாம் பாலென்பதாக நினைக்கின்ற பேரறிவெனும் பகுத்தறிவாகிய ஞானபுத்திக்குடையவராக பிரகாசித்தலுமாகிய சர்க்குணப்பூஷணர்களாம் அறுபத்துமூன்று நாயன்மார்களுடன், தெய்வப்புலவராந் திருவள்ளுவரென்னும் பொய்யாமொழிப்புலவருடன் அறுபத்துநான்கு திருத்தொண்டர்களின் அபிலாசையும், அன்னவர்களால், சைவசமயம் நிலைப்பெறும்படியாக முடிந்துள்ள அளவிறந்த பிரத்தியட்ச மகிமைகளும், சன்மத்தால் வந்தடையாநின்ற பாபச்செயலாகிய உலகபந்தம், தேகபந்தம், அதாவது; தேசாபி

மானம், தேகாபிமானம், பாஷாபிமான முதலாயுள்ள அபிமானங்களை யொருசிறிதும் வேண்டாது, சன்மார்க்கமாகுஞ் சிவசமயமாகிய செழும் பயிரை விளைவிக்கவேண்டி சகலவிதப் பற்றுகளையுமொழித்து இவைக ளின்மேல் அ்ரோசிக மூடையவர்களா யுள்ளாருடைய ஞானமும், சுத்த சித்த பெத்தமுத்தருடைய லட்சணமும், சிவசமயவுண்மையறியாது பூர்வக் கன்மமானது கண்ணை மறைத்தலான வழியடையாது பழித்த சமண புத் தர்கள், ஆலவாய்க் கரும்பென உயிர்க்கழுவேறியும், பார்வையற்றும், ஊமையாகியும், யானைக்காலில் வதைப்பட்டும், அரசரால் மந்திரிகளால், தண்டனையடைந்தும், அவர்கள் பாழிகளாகிய வீடுகள் இடித்துத் தகர்த் தப்பட்டும், கடைசியாக அவர்களுயிர்த்துறந்து பறவைகட் காகாரமான தும் தேவர்களா லுண்ணப்படாத ஆலகால விஷத்தைச் சாப்பிட்டதினு லுண்டான நீலகண்டத்தையுடைய சாட்சாத்கார சிவபெருமானே! அள வளாவிய பேரன்பை அன்பர்கண்மீது வைத்து வேண்டியவை யுதவிச் செய்து, எண்ணிலா வடிவங்களைக்காட்டி (குளவி புழுவைத் தன்மயமாக வாக்கிக்கொள்ளுகின்றவண்ணம்) தன்மயமாகத் தன்னைவிட்டோர்சிறிது நீங்காது (தந்வமசி) யெனும் மஹாவாக்கியமானதினிறுதியான கருத்துக் குடன்பாடாகத்தானே ஒன்றுபடுத்தி கலந்தானந்தக் காட்சியோடு சுயஞ் சைதன்யத் திருநடனம்புரிந்து வருவதெல்லாம், அநாதிமுத்த சித்துருவா க விளங்குகின்ற சிவானந்த வள்ளலாகிய நின்னுடைய செயலென முற் றுப் பெறுதலான், அங்ஙனமே அடியேனையும் புரந்தருட்சுரந்துன் றிருவ டிக்காளாக்குதலும் நின்கருணை யென்பதாக முடியும் பிர்மாவின் கபால மாகிய மண்டையோட்டைக் கையிலேந்திய பரமசிவமே! என்பதாம்.

---

§ பரமசிவமானது திருவாலவாயாகிய மதுரையில் நடத்தியத் திரு விளையாடல் அறுபத்துநான்கெனவும், கலைஞானம் அறுபத்துநான்கென வும், தத்துவம் அறுபத்துநான்கெனவும், இத்தத்துவம் ஒவ்வொன்றும் ஒவ்வொருவுருக்கொண்டுவந்து சம்யக்காட்சி, சமயவிளக்கம், சமய வுண் மை, சமயபேதம், சமயமூர்த்திகரலட்சணம், இவைமுதலானவை (செருப் பிற்கூடு) எப்படி வேறாகாதோ? அதைப்போல்; சிவமாகத்தானே சிவத் தோடு கலந்துள்ள அடியார்கள் அறுபத்துநான்கெனவுந் தத்வார்த்தசுபிஷ லட்சண சிவஞான சித்தாந்தமென்பது மலைமேலிட்ட தீபம்போல உள் ளன்புடையாராகிய திருத்தொண்டச் செல்வர்கட்கு உண்மை விளங்கு மென்பதே திருவுளத்துடைத்து. இங்ஙனமாய ஆன்மவிலக்சணத்தைப் பரியாலோசிக்குமிடத்து; தன்மூழங்கையைச் சந்தனக் கட்டையாகத் தானே வுபயோகித்து, அத்தேகத்தை ஸ்கந்தம் வாசனையாக்கி, சிவகாட்சி,

யினுல் மாயவேடதாரிகளாகிய சமணரூரைக் கீழ்ப்படுத்தி அரசாண்டு
நித்தியசாதனையை யடைந்து, பாபச் செயலாயுள்ள துன்மார்க்கத்தை
யழித்து அடக்கி சன்மார்க்க நெறியினின்று, திருமேனியே விபூதியாக
வும், ருத்ராக்கமே கண்ணுகவும் பஞ்சாக்கரமே அபிஷேக வாராதார தத்
துவ சொரூபமாகவும் நிற்றலால் இம்மூன்றிஞல் சிவத்தோடு கலந்தாரெ
ன்ற ஞானக்கிளர்ச்சி முதிர்ச்சியாகிய அதிதீவிரதரபக்குவத்தை (மும்மை
யாலுலகாண்ட மூர்த்தியெனலும்,) அழுக்கை வெளுக்கிறவன் வண்ணு
ணுதலால், பாபமாகிய பூர்வ கன்மத்தை அறிவெனும் வெள்ளாவியிலிட்டு,
சஞ்சிதவாசனையின் வல்லமையைப் பிழிந்து ஞானுக்கினியிலே வேகவைத்
து, அருளென்னுங் கஞ்சியிற் றுவைத்து ஆனந்தமென்னுங் காற்றோடு
கலக்க சிவமாகிய பரமேஸ்வரனின் றரிசனை சமீபிக்காமையினுற் றுன்ப
முற்று கன்மமாகிய வினைத்தலையை மரணமாகியக் கல்லிலுடைக்க ஆரம்
பித்தப்போது சர்வேந்திரியனுயுள்ள யீச்சுரன் காட்சித்தா சிவத்துடன்
கலந்த (திருக்குறிப்புத்தோண்டனெனலும்) ஆசனுரென்னுஞ் சூரியபூமி
யிலே சிதம்பரமாகுந் தேகத்திலே, தில்லைவனமென்னும் மனக்காட்டைத்
திருத்தி வளமைச்செய்து, ஆனந்தவித்தை; அன்பென்னுஞ் சலத்தாற்
போஷிக்கப்பட்டு, அருளென்னும் பழமாகிய இன்பக்கனியை (நம்-நாமாக
தன் - தானுக) நம்தன் அதாவது நந்தன்) எனும் பெயருடன் கன்மேந்தி
ரியங்களாகிய இல்வாழ்க்கையின்றி, சர்வசுதந்திர கோலாகலனுய் சதா ஈசு
வரதியானமுடையவனுகி திருநீறு, ருத்ராக்கம், சடைமுடியிலங்க சிவஞா
னம் பொங்கித்ததும்ப அதனிடமாகயெழுகின்ற ஞானவமிழ்தத்தையருந்
தி தனதிடமாகவுதித்து சன்மவாசனையாகி வுருகொள்ளுங் காமக்குரோ
தாதி முதலிய சண்டாளத்துவத்தைத் தலைக்காட்டாது பக்தியினுற்றகித்து
தனதுறவினர் பந்துக்கள் சிநேகிதர்களாகி பஞ்சபூதபௌதிக சேகரமாய்
விளையும் இந்திரியங்களைத் தனக்குளடங்கும்படியாக வசப்படுத்தி அறிவெ
னுந் தெய்வமாகின்றப் பரமேஸ்வரனுகவும், எல்லாவுயிர்களையும் நாடகசா
லையாகிய தேகத்திரயத்திலேயாட்டிவைத்து (தானுடையாவுமாட அவனசை
யாது அணுவசையாது அவனன்றி தெய்வ மமரருமில்லை, என்பதையொ
க்க) மண் பொம்மையாகிய வுடலிலே புகுந்துக்கொண்டு கூத்தாட்டஞ்
செய்யும் நடராஜப்பெருமானினருட் பிரவாகத்தாலானந்தம் பெருகி உப
தேச குருவாகி சர்வபாவத்தை ஞானுக்கினியாலே சுட்டெரித்து கன்ம
நெருப்புக் குழியிலேயிருந்தெழுந்து பரிசுத்தமுடையவனுகி தேவர்கள்,
வேதங்கள், வேதங்களோதுகின்ற பிராமணர்களாகுந் தில்லைவாழந்தணர்
கள், பிரம விட்ணு, பதஞ்சலி, வியாக்ரமபாதர், முதலாகிய தத்துவ சொ
ரூபங்கள் பார்த்து ஹரஹர சிவசிவ: வென்னுங் கரகோஷடஞ்செய்து

வணங்கி யார்ப்பரித்துக் கொண்டாட வெளிப்பட்டு, ஞானதேகமாகிய சிதம்பரத்திற்குட்புகுந்து மூர்த்திகரமாகிய சிவமானார்.

பொன்னிலே வொளிப்பிரகாசித்து விளங்குவதைப்போலும், (புலி பசுத்தோல் போர்த்தாற் பசுவாகவும், பசு புலித்தோற் போர்த்தாற் புலியாகவும்) உட்குணம் வெளிக்காட்டாது, வெறுந்தோலை (என்புதோல் போர்த்த வுடம்பு) என்னும் முதுமொழிக் குபாதானமாக மேல் வேடத்தைக் கண்டு மயங்கலும்; உள்ளத்தினுண்மையைக் கண்டுபிடிக்கின்ற பூரண அன்பாகிய ஞானமில்லாதபடியினால் ஒன்றையொன்று நீங்குதலும்; துவேஷித்தலும், புறங்கழித்தலும், அன்னியமாக்கலும் வெறுப்படைதலுமாகிய பலபல கொள்கைகளையடைகின்றன. பஞ்சு வெண்மையானதென்பது உண்மைப்பொருளேயன்றி அபத்தமல்ல, அப்பஞ்சை; மஞ்சள் நீலம் சிகப்பு, கருப்பு, பச்சை, ஊதா முதலாகிய பலவித வர்ணபேதத்தைக் கலந்து வெவ்வேறு நிறமாக்கி பார்வையிலே ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுத்துவதினாலே (அழகுடையதை யாவரும் விரும்புவது உள்ளதேயாதலான் அவ்வழகானதையே விச்சித்து மயக்கத்திலாழ்ந்து (உடம்பிற்குடுப்புடுத்தல்) உடுக்கை-வஸ்திரம்) அணிந்துக்கொள்ளுதலி லபிலாசையுடைத்தலேயாம். அவையும் விலையில் ஒன்றிற்கொன்று பேதமாவதைப்போல், சேவல வுடுப்பிற்கும் உயர்ந்த வுடுப்பிற்கும் மரியாதை கௌரவம் உபசரிப்பு, அரவணைப்பு; வாக்குநயம் பார்வையில் வெறுப்பு, விருப்பம் இவைமுதலாகியவனந்த பேதாபேதங்களே; மேகம் மூடிக்கொண்டுள்ள வாகாயத்தைப்போல, யாவரிடச்சட்டையின்மே லின்னொரு சட்டையைப் போர்த்துக்கொண்டு நடைப்பிணமாகத் திரிகின்ற சீவர்களை மூடிக்கொண்டிருப்பதென அறிவாளிகளாகிய ஞானிகட்கு மாத்திரம் நன்குபுலப்படும். இதனுடன் நூற்றுப்பத்தாயிரம் பொன்பெறினும் நூற்சேலை நாளுக்குநாள் நைந்துவிடும் என்றுங்கிழியா தென்பாட்டு) எனுஞ் சாரதாம்பாளாகிய ஔவையார் திருமொழிப் பொய்யாகாது அதிக விலையேறப்பெற்ற ஆடைகள் முதலானவை நாளுக்குநா ளுபயோகித்ததினால் நைந்து கிழிந்து வர்ணங்குறைந்து (அதாவது சாயம் போக) சாயம், சாயல், சாழல்) மாறுவதனால் எவ்வளவு துக்கமும் கஷ்டமுமுண்டாகுமோ அதைப்போல மனிதச் சாழலையுடைய சீவனுக்கு அங்கயீனம், வறுமை, நோய், முதலாகிய குறைவினால், இளைத்து, பெலயீனமுற்று, நரை, திரை, வினை, மூப்பு, இவைகளால் அளவில்லாத மனோவியாகுலமடைந்து இறுதியில் சாக்காடென்னும் மரணத்தினால் இருந்தயிடந் தெரியாமலுந் தனக்கு வேண்டுமென்று, பலபாடுபட்டு சேர்த்துவைத்ததில் ஒருதுரும்பு தூசேனுங்கூட வெடுத்துப் போகாமலும் ஏழைகளுக்கு, ஆண்டவன் திருப்பணிக்கு, நலிந்துள்ள தன்

குடும்பத்தாருக்கு (ஈசனடியாருக்கு, நல்லவர்க்கு நாசிறப்பின்றி கடவுளைப் பாடும் புலவர்க்கு ஞானிகளுக்கு) ஆலயம், மடம், திருக்குளம், அன்னச் சத்திரம், கல்விச்சாலை முதலியவைக்கு உதவாமலும், அழியாக் கீர்த்தியைச் சம்பாதித்துக்கொள்ளாமற்படி மண்ணாய்ப் போகக்கூடிய அழியுங் கீர்த்தியையடைந்து செத்துப் போகின்றதைப்போல பெரும் பாபக்கிருத்தியமும், அறிவீனமும், அஞ்ஞானமும், நரகவாதனையும், வேறொன்றுமில்லையெனத் தெரிந்தார் சன்மார்க்கத்திலேயே உடற்பொருளாவி இம்மூன்றையுந் தத்தமாகக்கொடுத்து சிவமானார்களென்பதே சைவாகமம்நீதி நூல் முதலியவையின் சத்தியக்கருத்தென விவேகிகளொப்புக்கொள்வார்கள்.

எண்ண முன்பா விளகின் மனமுங்
கண்ணீர்ச் சொறியுங் கருத்தொன் றுகு
மண்ணலே நினது வடிநிழன் வாழ்வே
கண்ணுட் கலந்த கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) உலக பாசபந்தத்திலே வைத்துள்ள ஆசைகள் நூறுபங்கிலே ஒருபங்கானது தேவரீரின்மேலிருந்து மனஞ்சசிந்ததேயானால் அதனது அடையாளமாக விழியின்சலம் பெருகும், அந்நேரம் புத்திவொருநிலையினிற்கும் அதே நெறியிலே நிற்பதற்கான பேரறிவைத் தந்தருளுவீரேயானால் எனைக் கெடுக்கத் துடைதட்டித்திரியுங் கன்மத்தின் வலியானது விட்டொழியும், நானும் புனிதனாவதுமல்லாமல் சுயம் பிரகாசமான வும்மூடைய திருவருட்கலந்த பாதத்திலே யென்ஞான்றுஞ் சுகித்திருப்பேன். எனையாட்கொள்ளும் பரமரட்சண்ணிய தயாநிதியே! அழுக்காறெனுஞ் சேற்றிலே யிறங்கிக் கரையேற வழித்தெரியாதலைந்து யிழிந்தக் குணத்திலே நாளையும் எனதறிவையுங் கழித்து வாளாய் மரிப்பதற்கே வுடலெடுத்துள்ளவனாகிய விக்கொடியச் சண்டாளனின் உட்புறம் புள்ள சிந்தையுஞ் செயலுந் தெரிந்தனையன்றோ? நேத்திரத்துள்ளே ஒளியாக நிறைந்து பிர்மாவின் கபாலமாகிய மண்டை யோட்டைக் கையிலேந்திய பாசிவமே! என்பதாம். (௩உ)

இருக்கும் வரையி லியாவு மிருக்கும்
பெருக்கித் தவித்துப் பிரியுநாட் பிரியும்
நெருக்காப் படியுன் நிழலடி சேர்த்தாட்
கருத்தை யறிந்த கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) அகிலகாரண புவன பேதாபேதங்கட் கன்னியமின்றி தற்சுதந்தரத்தை பாவித்து யெல்லாவர்றிற்குந் தலைமையனாகியிருந்து பரிபாலித்துவருங் கருணாகரக்கடவுளே! ஊனாகிய மட்குடத்தை

யுடைய தேகத்திற்குள்ளே, ஜீவனாக மறைந்திருந்து சகலவித நலம்பொலமியாவையு முடித்துக்கொண்டு, எதுவரையினுங் குடித்தனஞ்செய்திருக்கும் வீட்டை நீங்காதிருக்கின்றனவோ அதுவரையினு மனுபவ பாத்தியமாகச் சூழ்ந்துள்ள மனைமக்கட் சுற்றம் முதலான சருவமும் நீங்காது குரங்கு பிடித்தபிடியைத் தான்சாகாவரையிலெப்படி விடாதுப் பற்றிக்கொண்டிருக்குமோ அதைப்போல; ஆசாபாசபந்தமனைத்தும் பிடித்திருக்கும், அவைகளின் எண்ணங்களெல்லாம் நாசமாகி வழிப்பட்டிருந்த சருவமுங் கைவிட்டொதுங்கிப்போக, மனந்தளர்ந்து, வெறுப்புண்டாகி ஐயகோவென்றலறி பெருமூச்செறிந்து ஆதரிப்பவரில்லாமல் ஆன்மா திக்கியற்றலைந்து மாலுமியில்லாத மரக்கலம்போலத் திகைத் தொழியுந் தினத்திற்றனதென்று அளவளாவியயாவுந்தானே நீங்கிவிடும். இவ்வித மரணத்துன்பக்காலஞ் சமீபித்து வாதனையினாலெனதுப் பிராணன் கட்டுப்படாதப்படி தேவரீருடைய ஸ்ரீ பாதங்களை வணங்கி; அடைந்துள்ள வினையகன்றுமது அருட்சூழ்ந்த திருவடிச்சாழலிற்றங்கி வாழும்படி அநுக்ரஹஞ்செய்யுங் கலியாண சுந்தரேஸ்வரராகிய காருண்யமூர்த்தியே! அடிமையினுடைய வுள்ளத்தையும், அவ்வுள்ளத்திலுதித்துள்ள எல்லாநிலையும், செறியுஞ் சிறிதும் மறைவின்றித் தெரிந்த ஞாஞேயமே! பிர்மாவின் கபாலமாகிய மண்டையோட்டைக் கையிலேந்திய பரமசிவமே! என்பதாம்.

ஈசனே நின்கவிக் கிலக்கணக் குற்றம்
பேச மகிழ்ந்தயிப் பேயுல கதிலே
நீசனேன் புன்சொ னியமந் தந்திடுமோ?
காசினி வணங்குங் கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை.) திருவாலவாயென்னும் மதுரையிற் பாண்டிமாதேவியின் கூந்தலிலிருந்த பூவின் வாசனையால் மகிழ்ந்தவரசன் அப்பூவின் பெயரைத் தெரிந்துக்கொள்ளவும், அதனது பெயரைச் சொல்வோருக்கு ஆயிரம்பொன்முடிப்புடைய பொற்கிழி கொடுப்பதாகப் பறைசாற்றிவருவதைக்கேட்டு வருந்திய தருமிக்குக் கொடுத்தப்பாடலில் இலக்கணமின்றென; தமிழ்ச்சங்கத்தின் றலைவராகவிருந்த நற்கீரர் சொல்லலும் பொன்கிடைத்து விவாகஞ்செய்யப்பெறாமற் போயினும், ஆண்டவனின் பாடலுக்கே குற்றமேற்பட்டதென மனங்கசிந்து ஆலயத்தை யடைந்து துக்கித்த தருமிக்காக, வேதங்களை சீடராக்கிக்கொண்டு சந்திர சடாதாரமான்மழு, சதுர்ப்புயம், நெற்றிக்கண்ணுடனே சங்கத்திற்கெழுந்தருளிப் பாடியகாலத்தும், நற்கீரர் தருமிக்கு முற்கூறியபடியே இலக்கணமின்றென் றுரைத்தலும், அவ்வமயம் நெற்றிக்கண்ணைக் காட்டியப்போழ்தும் பாடல் குற்றங்குற்றமேயென்றுச்சொல்லி சந்தோஷித்த (தன்னையறி

யும்படி படிக்காத வூனக்கல்வியினால் மமதையுற்றுக்கிடக்கும் மனவகங்காரப் பைசாசத்தின் ஆளுகையிற்சிக்கியுள்ள மாயப்பூமியின் கேவலத்தன்மையிலே, கல்வி, கேள்வி, நல்லோர்சேர்க்கை, சாத்திரவுணர்ச்சி, சமய வுடன்பாடு, தெய்வப்பற்று வூழ்வலியொழித்தல், பிறந்ததற்கேற்றப்பயன், வீடெனு மோட்சமாகிய சிவஞானமுத்தி, இவை முதலாய சன்மார்க்க நடையிற் சிறிதுமில்லாதப் பாமரனாகிய வடியேனுடைய கேவலவார்த்தை (பிரயோசனமும் நன்மையுந்தராதப் பேதைமொழி) பெரியோர்களினாலும், பரமாசாரியர்களாகிய நால்வர்களினாலும், மற்றுங் கணக்கிடப்படாத அனந்த சைவப்பிரசாரணர்களாகிய மஹான்களாலும், திருத்தொண்டர்களாஞ் சிவாநுபூதிச் செல்வர்களாலும் இன்னுமளப்பரிய மேதாவியர்களாம் பொய்யடிமையில்லாதப் புலவர்களாலும், பரமனையேபாடுந் தொழிலுடையப் பருணிதர்களாலும் இயலிசை நாடகமென்னும் முத்தமிழினாலும், அனவரதம்பாடி யானந்தக் கண்ணீர்ப்பெருகி தன்னை மறந்து பரிபூரண திசையாம் நிரதிசயானந்த போகயோகஞான சம்பன்னர்களுடைய அருட்பாடலுக்குமுன் என்கதியாகும்? அப்பெருந்தகையாளர்களுடைய செய்யுளாகிய திருவாக்கியப் பெருமையையும், நேமநிட்டை பக்திமுக்தி சாதனையாகிய பெரும்புண்ணியத்தையு முண்டுபண்ணுமோ? எட்டுணையு முண்டுபண்ணுதென்பதே சித்தாந்தம். சர்வசங்காரமூர்த்தியென உலகாதியந்தமுங் கும்பிட்டு உள்ளன்போடு துதிசெய்யப்பட்டு, பிர்மாவின் கபாலமாகிய மண்டையோட்டைக் கையிலேந்திய பரமசிவமே! என்பதாம்.

தவமுஞ் செய்திலேன் சைவ நெறிகொண்
டவம தகன்றிலே னண்டிடு நாயேன்
சிவப்பிரகாச தேசிகன் றமிழ்க்கு
கவனித் தருட்சரண் கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை.) சருவலோக சரண்யஞன கிருபாநிதியே! "தவஞ்செய்வார் தன்கருமஞ்செய்வார் மற்றெல்லாரு மவஞ்செய்வாராசையுட் பட்டு" என்னுந் திருவள்ளுவ நாயனாரின் திருவாக்கிற்கிணங்க சிவஞானச்செல்வர்களாகிய மஹானியர்கள் புண்ணிய விரதாநுட்டானத்தினாலுமது திருவடியையடைந்துள்ளார்களன்றோ? அம்மேதாவியர்கட் செய்துள்ள பெரும்பேற்றினி லொருசிறிதுமியற்றில்லேன் அல்லது; சிவசமயத்திற் குடன்பாடாயுள்ள விதிகளையநுசரித்து நடந்து பழைமையாயிருந்தென்னுடன் வாதியாநின்ற பாபகிருத்தியத்தை நீங்கியில்லேன் சாட்சாத்கார பரமசொரூபியாகிய பரமானந்தக்கடவுளே! தேவரீருடைய வுதவியாகியத் துணையின்றி வேறொன்றினையு முண்மையாகநம்பாது எக்கதிக்காளாக்கினும் பரமதகப்பனாகிய தங்களது கடாட்சமென்றெண்ணி இரவும்

பகலுங் கலங்கிநிற்குமடியேன் (திருவாவடுதுறையென்னுங் கயிலாயபரம் பரை ஆதீன சற்குருபீடமாகயினிது விளங்கிய சிவப்பிரகாச சுவாமிக ளிடத்து சமய தீக்கைப்பெற்றும், அப்பெருமானுடையப் பெயரையே தீக்ஷாநாமமாகக் கொண்டுள்ளவனுமாகிய வெளியன் சிவானந்தப்பேரன் புடைய திருவடிநிழலிலடையும் புண்ணியம் வாய்க்கும்படி கடைக்கண் பார்த்தருள கிருபையுண்டாகவேண்டி, அபிலாசையோடு, பித்தன்வாயில் வந்ததை யுளறுவான்போன்று பினத்தலையுடையதானப்பாடலை சொல்லி யுள்ளேன், இப்பாடலினிரம்பியுள்ளக் குற்றங்களைப்பொறுத்து எவ்விதத் தேனும் அடிமைக்கொண்டாதரிக்கத் திருவுளங்கொண்டருளவேண்டும் சுவாமி; அங்ஙனஞ்செய்யும் பாதாரவிந்தத்திற்கு அத்தியந்த விநய சம்பூ ரண நமஸ்காரம் பிர்மாவின் கபாலமாகிய மண்டையோட்டைக் கையிலேந் திய பரமசிவமே! என்பதாம். (கடு)

—§—

மயிலேசன் வணக்கமாலிகை.

—§—

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

திருவளர்ப் பரம ஞானச் செல்வமா யகில மெல்லாம்
பெருகொளிச் சுடருமாகிப் பிறங்கும்பல் தெய்வ மாகி
யருணிறைச் சொருபமான வண்ணலை யமரர்க் கோனை
மருவளர் மயிலேசன் பொன் மலர்ப்பதம் வணங்கி வாழ்வாம்.

(இதன் வியாத்தியுரை) அருளோங்கியக் கடவுளென்னுஞ் ஞான தனமாய், உலகாதியனைத்தும் அடையவேண்டிய பிரகாசமுமாய் விளங்கு கின்ற அனந்தகர்த்தாவாகி அக்கர்த்தாக்களுள்; நிறைகின்ற வடிவுமான தந்தையை, தேவர்கட்கதிபனை, அளவிறந்த குணபூஷணமாய் எல்லாவி டத்துங் கலந்துள்ள திருமயிலையீசன் (கபாலீசன்) கனகபுட்பந் தங்கிப் பரிமளிக்குந் திருவடியைக்கும்பிட்டு அவரது அருட்பிரவாக நிழலிற் சதா நீடித்திருப்போம் என்பதாம். (க)

அன்பெலாந் திரண்டு யாவு மளித்துளங் களித்து ளானை
யின்பத்து ளின்ப மாகி யெழினிறை தவமு மாகி
கன்னலங் கனிய தாகிக் கர்ப்பக வல்லி யோடு
மன்னுநல் மயிலேசன் பொன் மலர்ப்பதம் வணங்கி வாழ்வாம்.

(இதன் வியாத்தியுரை) எழுபிறவித் தோற்றங்களாயுள்ள சகல ஜீவ ரின் பூர்வ சஞ்சித பாவபுண்ணியப்பற்று யெங்ஙனமாகியதோ அவ்வகை யான ஆசையாவு மோருருவாக்கி; அவைக்குத்தகுந்த தேகங்களைக்கொடுத்

து அவ்வான்மா தன்னையுள்ளபடி தத்தஞ்செய்து சிந்திப்பதினலே, ஆனந்திப்பவனை இனிப்பின் இனிப்பாகி ஞானமலிந்த விரதமாகி தித்திக்கும் பழமுமாகி, கர்ப்பகவல்லித்தாயாரென்னும் என் அன்னையோடு விளங்காநின்ற திருமயிலையீசன் (கபாலீசன்) கனகபுட்பந்தங்கி பரிமளிக்குந் திருவடியைக் கும்பிட்டு அவரது அருட்பிரவாக நிழலிற்சதா நீடித்திருப்போம் என்பதாம். (உ)

கஞ்சனின் சிரசி லொன்றைக் கையி லேந்தியே மகிழ்ந்து
அஞ்சலென் றமரர் கட்கு வடைக்கலந் தந்த நாதன்
பஞ்சையின் றெல்லை திரப் பார்த்தருட் புரியு மெம்மான்
மஞ்சுரு மயிலேசன் பொன் மலர்ப்பதம் வணங்கி வாழ்வாம்.

(இதன் வியாத்தியுரை) பிர்மாவினுடைய ஐந்துதலையி லொன்றைக் கிள்ளி கரத்திற்றங்கி; சந்தோஷமுற்று தேவர்கட்குமாதரவாக அபயாஸ்தங்கொடுத்த சிவேஸ்வரன், நெருப்பிலழியப்படும் பஞ்சைப்போல வினைத்தியினற் சுடப்பட்டு அணைப்பாரொருவருமின்றி வாதைப்பட்டிருக்குஞ் சொற்பனை அதாவது அற்பபுத்தியுடையவனின் கன்மமானது ஒழியும்படி கண்ணோக்கி நன்மைசெய்யும்படி யெம்மையே இடமாகவுள்ளவன் ஆசைமிகுந்த திருமயிலையீசன் (கபாலீசன்) கனகபுட்பந்தங்கி பரிமளிக்குந் திருவடியைக் கும்பிட்டு அவரது அருட்பிரவாக நிழலிற் சசா நீடித்திருப்போம் என்பதாம். (ங)

சந்தத மேத்தி போற்றுஞ் சர்க்குணந் தனி னடித்து
பந்தமென் பதனை நீக்கிப் பண்பருண் மாமஹேசன்
சுந்தர வடிவங் கொண்டுத் துலங்கிடுங் கருணை யோடு
வந்தருண் மயிலேசன் பொன் மலர்ப்பதம் வணங்கி வாழ்வாம்.

(இதன் வியாத்தியுரை) எந்நேரமுமறவாது தொழுது வணங்குவோர்களின் நல்லத்தன்மையிலே யிருந்து விளையாடி அன்னவர்களின் பாபத்தைக்கெடுத்து ஞானவின்பத்தைக் கொடுக்காநின்ற ஈசுரர்களிலே அதிகமானவன், அன்பர்களாகிய மேதாவியர்கள் முன்னம் அழகானத் திருமேனியைத்தாங்கி பிரகாசமுடைய அருளுடன்வந்து அநுக்ரஹஞ்செய்யுந் திருமயிலையீசன் (கபாலீசன்) கனக புட்பந்தங்கி பரிமளிக்குந் திருவடியைக் கும்பிட்டு அவரது அருட்பிரவாக நிழலிற் சதா நீடித்திருப்போம் என்பதாம். (ச)

சுகதுக்க மிவை யொன்றகுஞ் சூதகை யறிந்து நின்று
அகம் பிரம பாவனைக ளற்றுநன் மதியைப் பெற்றுப்
புகலருஞ் சொருபங் காணப் புகலருட் புண்ணிய மூர்த்தி
மகத்துவ மயிலேசன் பொன் மலர்ப்பதம் வணங்கி வாழ்வாம்.

(இதன் வியாத்தியுரை) சனனமெடுத்து அதனிடத்தே விளைகின்ற வித்தாகிய நன்மை தீமையென்னு மிவ்விரண்டும் வேறுவேறாகி அதனது சுபாவத்தைக் கொடுத்துக் கெடுக்காதபடி அவ்விரண்டும், ஒன்றே (அதாவது நல்லதுமில்லை கெட்டதுமில்லை) என சமமாக வெண்ணுகிற தந்திரத்தைத் தெரிந்து எந்தயும் பிரிக்காது ஒரே நிலையிலிருந்து எல்லாமென்னுடையது, நானே அதிகாரி, எனக்குச்சமானமானவரொருவருமில்லை, என்னும் அறிவீனமான மூடபுத்தியையும், அதனாலுண்டாகின்ற மனோகர்வம், மனோவியாபாரம், மனமொருவழிநில்லாது அங்கிங்கலைதல் முதலாய தீயக்குணத்தை நாளுக்குநாள் ஆண்டவனைக்கெஞ்சி; அதைத்தலையெடுக்காதொழித்து அதனாலுண்டாகின்ற ஞானவறிவையடைந்து கடவுட்கருணையல்லாது ஒருவராலுஞ் சொல்லமுடியாத வுருவத்தைப் பார்க்கும்படியான தஞ்சங்கொடுக்கின்ற தவமூர்த்த சொரூபமாம் அற்புதத் திருமயிலையீசன் (கபாலீசன்) கனகபுட்பந்தங்கி பரிமளிக்குந் திருவடியைக் கும்பிட்டு அவரது அருட்பிரவாக நிழலிற் சதா நீடித்திருப்போம் என்பதாம்.

சத்தசத் தின்ன தென்றுத் தானறிந் துண்மை வீறி
சுத்தசன் மார்க்க நல்லோர்த் துணையதை ஞான்றுங் கொண்டு
மத்தரும்பேயர் பாலர் மருவிடு நிலையுள் ளார்முன்
வத்துவா மயிலேசன் பொன் மலர்ப்பதம் வணங்கி வாழ்வாம்.

(இதன் வியாத்தியுரை) அழியாததிது, அழிவதிது, என்பதால் அதாவது; நித்தியமிது, அநித்தியமிதென இத்தேகத்தையுந் தேகத்திற்குள்ளாக காண்பதற்கில்லாது மறைவானப் பொருளாகத்தானேயிருந்து ஆட்டிவரும் பிராணனென்னுஞ் சீவனாகிய சிவத்தைக் கண்டுபிடித்து அதன் வழியிலே மெய்யானபக்தி, விசுவாசம் இவைமுதலாயது அதிகமாகி குருலிங்க சங்கமபக்தியிலே முற்றுந் தங்களைத் தத்தஞ்செய்து கடைப்பிடித்தொழுகாநின்றப் பெரியோர்களாகிய திருக்கூட்டத்தாருடைய ஆதரவை என்றுமடைந்து (ஞானிகள் நிலமை) ஒன்றுந் தெரியாதாரைப் போலவும், பைசாசம் பிடித்தாரைப்போலவும், குழந்தைகளைப்போலவும், ஆகின்ற குணத்தைக்கலந்து மனமசையாத (வாசியோகம், நிட்டை, சாதனை) இவைமுதலாய பெரும் பக்குவஸ்தானத்தில், ஐக்கியமுடைய (பெத்தமுத்த சீவேஸ்வர்கள் முன்னரே) சருவசாட்சிமாத்திரையாய் உள்ளப்பொருளாக விளங்குந் திருமயிலையீசன் (கபாலீசன்) கனக புட்பந்தங்கி பரிமளிக்குந் திருவடியைக்கும்பிட்டு அவரது அருட்பிரவாகநிழலிற் சதா நீடித்திருப்போம் என்பதாம். (௬)

கலைபடு நெறிக்கா ளாகி கரண வாதனைகள் வென்று
நிலையென யாதும் வேண்டாத் திறத்துளோர் தேவ ராஞர்

மலைவுகொள் வெய்ய வேட்கை வாஞ்சைக் கொள்ளாரின் பக்தி
வலைபடு மயிலேசன் பொன் மலர்ப்பதம் வணங்கி வாழ்வாம்.

(இதன் வியாத்தியுரை) இறைவனை சொரூபத்தாலாய வுருகொண் டெழுந்தினிது விளங்காநின்ற எழுத்தினால் உண்டாகிய ஆகம, வேத, புராணேதிகாச, மஹாவாக்கிய சாமவேத ஹோமசங்களி லெடுத்தாண்டமையைப்பெற்ற, ஆசார அனுட்டான, விரத பக்தி இவைகளையாராய்ந்து அவைகளெதை நல்லதாக நிச்சயிக்கின்றதோ அவ்வழிக்கு ஊழியனாகி (தொழும்பனாகி) அவ்வூழியத்தின்பலனால் நல்லறிவையடைந்து பஞ்சபூத சேட்டைகளையடக்கி, அதனது தர்க்குணத்தின் தொந்தரவைச் செயித்து (கல்லைப்போலசையாமலும்) யாதொன்றையும் விரும்பாது சதா நிட்டாபராகயிருக்கும் பக்குவத் தேர்ச்சியை யுடைத்தானவர்கள் யாவராலும் வணங்கும்படியான கடவுளானார், உலகமாய்கையாகிய பொய்ப்பொருளென்னும் மண், பெண், பொன், இவைகளே நமக்கு மேலானது இதற்கு நிகரொன்றுமில்லையெனுங் கன்மமாகிய ஆணவச்செருக்கை ஆசாபாசத்தின்பேரில், எவ்வித நிலைமையிலும் விரும்பாதவருடைய பக்தியென்ற கூண்டிற்குள் தங்கும் திருமயிலையீசன் (கபாலீசன்) கனகபுட்பந்தங்கி பரிமளிக்குந் திருவடியைக் கும்பிட்டு அவரது அருட்பிரவாக நிழலிற் சதா நீடித்திருப்போம் என்பதாம். (எ)

எல்லையில் லாதத்துன்ப மிடுக்கணு ளொந்துக் கெட்டுப்
புல்லறி வதனனாளைப் போக்கினே னேக்கமின்றி
செல்வமாஞ் சிவஞானத்தைத் தேடரு மோக்க மீயு
வல்லசீர் மயிலேசன் பொன் மலர்ப்பதம் வணங்கி வாழ்வாம்.

(இதன் வியாத்தியுரை.) தானென்ற ஆணவங்கொண் டழிகின்றப் பாழ்மனமே! அளவில்லாத சஞ்சலவாதையினால் நலிந்துவாடி அற்பபுத்தியினாலே வாழ்நாளை வீழ்நாளாக்கிப் பின்னால் வந்தடையாநின்ற கேட்டைப்பற்றிக் கொஞ்சமேனுங் கவனியாது கழித்துவிட்டோம்; இவை நீக்கிச் சுகமடைய சிவஞான திரவியத்தைக் கொடுத்தாதரியாநின்ற மகா வலிமையின் சிறப்புவாய்ந்த திருமயிலையீசன் (கபாலீசன்) கனக புட்பந்தங்கி பரிமளிக்குந் திருவடியைக் கும்பிட்டு அவரது அருட்பிரவாக நிழலிற்சதா நீடித்திருப்போம் என்பதாம். (அ)

போற்றிசெய் தனித்திய மாயைப் புந்தியிற் றங்கிடாது
காற்றினி லலவம் போலக் கைவிடி னதுவே முத்தி
சேற்றினிற் கம்பமாகித் திகைத்தனை யலைக்கா யுன்னை
மாற்றியே மயிலேசன் பொன் மலர்ப்பதம் வணங்கி வாழ்வாம்.

(இதன் வியாத்தியுரை.) சாட்சாத்காரமுடைய தனிப்பிழம்பாகிய பரமசிவத்தை வணங்கி; நித்தியமில்லாத அநித்தியத்தை விளைவிக்கும் பொய்யானது புத்தியினிலைக்காது காற்றிலகப்பட்டப் பஞ்சுபோல விஷயாகார, மமகாரங்களை (சட்டிசுட்டது கைவிட்டது என்பதாக விட்டுவிட்டாலதுவே மோட்சமாகும். இதைப்பற்றி கவனியாது: ஆற்றினிடத் தழுத்தமாகின்ற அசேதனத்திடத்து கோலாகி துக்கத்தை யணைந்தனை அவைநீங்கும்படியாக வுன்னைநீயே மாறுபடுத்தி திருமயிலையீசன் (கபாலீசன்) கனகபுட்பந்தங்கி பரிமளிக்குந் திருவடியைக் கும்பிட்டு அவரது அருட்பிரவாக நிழலிற்சதா நீடித்திருப்போம் என்பதாம். (கூ)

தந்தையு மன்னையாகி சற்குரு வரசன் றெய்வஞ்
சுந்தர மனைவி மக்கட் சுற்றமுங் கிளைக ளாகி
பந்தமுந் தொந்தமாகி பணிபஞ்சாக் கரமுஞ் சர்வ
மந்திர மயிலேசன் போன் மலர்ப்பதம் வணங்கி வாழ்வாம்.

(இதன் வியாத்தியுரை) அகிலகாரண பூதபௌதிக காரண காரிய லட்சணம்ஸமாக சகலவுருப்பெற்று விளங்குகின்ற ஈச்சுர தன்மலாவண்யத்தை சரிவரவாராயுமிடத்து, மனோவிகாரத்தினாலேற்படுகிற அஞ்ஞான புத்தியான பிரிவினையாகிய எவ்விதபேதமு மோர்சிறிதுமில்லாது; இத்தேக பந்தத்திற்கு சொந்தமாகக் காணப்படுகின்ற வுருக்களில் ஈன்று காக்குந் தகப்பன் தாய், ஞானக்கண்ணைக் கொடுக்காநின்ற பரமாசாரியன், உலகை யரசாட்சிசெய்யுஞ் சக்கரவர்த்தி, யாவராலும் வந்தனை வழிபாடுடன் வணங்கும் அற்புத தற்பர சொச்சொரூப சுகசொரூபமாக விளங்குந் தனிமுதற்கடவுள், இன்பத்திற்கிடமாக யேற்படும் அழகுடைய களத்திரம் மக்கள், குடும்ப முதலாயுள்ள இனங்களாகவும் பிறவிக் காதரவாகவுமுள்ள வினையும், அவைக்கனுகூலமாகிய மாய்கையும், அம்மாய்கையை யொழிப்பதற்கு சஞ்சீவியாகிய ஐந்தெழுத்தும் மற்றுமுருவகமாக நிச்சயிக்குஞ் சகல மந்திராதிக்யங்களுமாகக் கலந்துள்ள திருமயிலையீசன் (கபாலீசன்) கனகபுட்பந்தங்கி பரிமளிக்குந் திருவடியைக் கும்பிட்டு அவரது அருட்பிரவாக நிழலிற்சதா நீடித்திருப்போம் என்பதாம். (ய)

இறைவனு மிறைவியாகி யிரவி சந்திரனு மக்னி
குறைபடா குணமு மாகி கும்பிட்டோர்க் கநுக்ரஹித்து
சிறைபடு பஞ்சபூதச் செயலனைத் தையும் பொய்யாக்கி
மறைதொழு மயிலேசன் போன் மலர்ப்பதம் வணங்கி வாழ்வாம்.

(இதன் வியாத்தியுரை) சரவசர பேதமாயுள்ள வுயிர்களை ஆக்க காக்க அழிக்க இவைமுதலான தொழில்களுக்கு தலைவனாகிய சிவமும், தலைவியாகிய சத்தியும், சூரியன், திங்கள், நெருப்பும் இவைகளிற் சிறி

து் தளராத புத்தியும் ஆசித்து பூசித்த மெய்யன்பருக்கு வேண்டியவைக் கொடுத்துக் காக்க சித்தமுடையதும் பஞ்சபூதக் கள்ளர்வசமாகி நடத்திவரும் பாபக்கிரிகையனைத்தையும் மித்தையாக்கி; வேதங்களாலே தோத்திரஞ்செய்யாநின்ற திருமயிலையீசன் (கபாலீசன்) கனகபுட்பந்தங்கி பரிமளிக்குந் திருவடியைக் கும்பிட்டு அவரது அருட்பிரவாக நிழலிற்சதா நீடித்திருப்போம் என்பதாம். (லக)

சனனமாங் கடற்கடந்து சகலபற் றுகளை விட்டு
சினமெனும் பேயை மாய்த்து சிந்தையைச் சிவமதாக்கு
மினமெனுஞ் சாதுசங்க யிணக்கமே வாய்க்கச் செய்யு
மனந்தரு மயிலேசன் பொன் மலர்ப்பதம் வணங்கி வாழ்வாம்.

(இதன் வியாத்தியுரை) எடுத்துள்ள பிறவி சமுத்திரத்தைத்தாண்டி அதனிடத்தே விளைகின்ற எல்லா வாஞ்சைகளையுநீக்கி, கோபமாகிய சண்டாள வலகையின் சத்துவத்தையழித்து மனதை தற்சுதந்தர மங்களமாகச் செய்யுந் தெய்வக் குடும்பத்தாரென்னுஞ் சர்க்குணசம்பந்த திருக்கூட்டத்தாரைச் சேர்ந்தொழுகாநின்ற அடக்கமாகியவன்பை கைக்கூடச் செய்யும்படியான நெஞ்சை யநுக்ரஹஞ்செய்யுந் திருமயிலையீசன் (கபாலீசன்) கனகபுட்பந்தங்கி பரிமளிக்குந் திருவடியைக்கும்பிட்டு அவரது அருட்பிரவாக நிழலிற்சதா நீடித்திருப்போம் என்பதாம். (லஉ)

பந்தமுந் தொந்த மெல்லாம் பரவிடா தழித்தெஞ் ஞான்று
மெந்தையாஞ் சிவனைத்தன்னு ளேத்தியே காட்சிப் பெற்றோர்
விந்தையைக் கேட்க ஞான மிகுமிதன் வாய்மைக் கண்டு
வந்தித்து மயிலேசன் பொன் மலர்ப்பதம் வணங்கி வாழ்வாம்.

(இதன் வியாத்தியுரை) செனனத்திற்குடன்பாடாக யேற்பட்டுள்ள ஆசாபாசமியாவையுங் கைக்கொள்ளாமலும், அதனது குணமதிகமாக விசாலிக்காதபடி, அதிதீவிரதர பக்குவத்தினாலே கெடுத்தும், சதாகாலமும் பரமகாருண்ய மூர்த்தியாகிய தகப்பனும் சிவபெருமானை அந்தரார்த்தமாக பூசித்து, தரிசனையடைந்த மஹாத்துமாக்களால் நடத்திய அற்புதத்தை உள்ளபடியாக செவிமடுக்க (அறிவு - ஞானமானது) அதிகரிக்கும் இதனுடைய நெறியைப்பார்த்து உள்ளம்பூரிக்க வந்தனவழிபாடுச்செய்து திருமயிலையீசன் (கபாலீசன்) கனகபுட்பந்தங்கி பரிமளிக்குந் திருவடியைக் கும்பிட்டு அவரது அருட்பிரவாக நிழலிற்சதா நீடித்திருப்போம் என்பதாம். (லங)

பைவிடப் பாம்பின் வாய்க்கு பலியென நின்று மாய
வெய்யநோய் வாட்டி கொல்ல வேதைப்பட் டலறிக் கூவி

ஐயையோ? மரிப்பேன் றன்னை யாளுதற் கடனென் றென்று
வையமேன் மயிலேசன் பொன் மலர்ப்பதம் வணங்கி வாழ்வாம்.

(இதன வியாத்தியுரை) நஞ்சுடைய அரவத்திற்கு ஆகாரமாகுந் தேரையென்பதாக தனித்து ஆபாச மித்தையைத் தருகின்ற கொடிய வியாதி நலியச்செய்து; முடிவாக அதனது கஷ்டத்துட்சிக்கி உயிராகிய சீவன் நிலைப்பமோர்க்கமுந் துணையுமில்லாது ஒவெனக்கதறிக்கூச்சலிட்டு அந்தோ! அந்தோ! சாவேனை தற்காத்து ரட்சிக்கின்றது தேவரீருடைய கருணையாகிய பாரமென்பதாக வெந்தநேரத்து மறவாது திருமயிலையீசன் (கபாலீசன்) கனகபுட்பந்தங்கி பரிமளிக்குந் திருவடியைக் கும்பிட்டு அவரது அருட்பிரவாக நிழலிற்சதா நீடித்திருப்போம் என்பதாம். (யச)

—§—

சரணப்பஞ்சரத்தினமாலை.

—§—

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

சந்தவண்ணக்கோழிப்பு.

மணிகொண் டிலகும் வரமே சரணம்
மழுமா னரவப் பணியாய் சரணம்
அணிகொண் டிலகு மரனே சரண
மத்தனே கர்த்தனே முத்தனே சரணம்
பணிகொண் டிலகும் பரமே சரணம்
பதியே துதியே நிதியே சரணந்
திணிகொண் டிலகுங் கைலையா மயிலை
சிவமே! கபாலீச நின்சரண் சரணே. (க)

அருளே பொருளே மருளே சரண
மையனே மெய்யனே துய்யனே சரணங்
கருணா கரனே ஹரஹர சரணங்
கங்கையும் மங்கையின் பங்கனே சரணம்
உருவா யமைந்தா யுயிரே சரண
வுடலு ணடமே செய்வோய் சரணந்
திருவே மருவே கைலையா மயிலை
சிவமே! கபாலீச நின்சரண் சரணே. (உ)

அன்னையே தந்தையே யண்ணலே சரண
மப்பனே வொப்பிலா மெய்ப்பொருட் சரணங்

கன்னலங் கனியே சுவையே சரணம்
காரண பூரண வாரண சரணம்
இன்பமே துன்பமே அன்பே சரண
மீசனே வாசனே தேசனே சரணஞ்
சின்மயா னந்தனே கைலையா மயிலை
சிவமே! கபாலீச நின்சரண் சரணே. (௩)

ஆதியே சோதியே நீதியே சரண
மற்புதா தற்பரா சிற்பரா சரணம்
பாதிமா மதியே யணிவோய் சரணம்
பத்தருட் சித்தமே வித்தகா சரண
ஞாதுரு ஞானமே ஞேயமே சரண
நாதமே வேதமே போதமே சரணந்
தீதிலா மகத்வ கைலையா மயிலை
சிவமே! கபாலீச நின்சரண் சரணே. (௪)

அங்கமே லிங்கமே தங்கமே சரண
மஞ்சினேன் கெஞ்சினேன் பஞ்சையேன் சரண
மங்களர் தங்கிடுந் துங்கனே சரணம்
வாசிவா வாசிவா வாசிவா சரணம்
சங்கரா பிங்கிதந் தங்குவோய் சரணஞ்
சத்துவே வத்துவே சித்தமே சரணந்
திங்கட்சூழ் சடையோய் கைலையா மயிலை
சிவமே! கபாலீச நின்சரண் சரணே. (௫)

வாழி விருத்தம்.

புகலரிய ஓம்ஜெய விநாயகன் பூங்கழலும்
புரந்தான் கபாலீசன் கர்ப்பக வல்லியுமை
திகழ்முருகப் பரமன்வள்ளி தெய்வயானை மயில்வேல்
சீர்த்தியுடன் கீர்த்திவளர் சமயகுரு நால்வர்
மகிமைநிறை திருத்தொண்டர் சைவமுடன் புண்ணிய
மன்னும் வெண்ணீறு ருத்ராக்கமுமெய்ப் புலவர்
அகமகிழ்ந்து முத்திரிக்கப் பொருளுதவுஞ் செல்வ
ரனைவருமித் துதிவிபுல மருணீடி வாழியவே.

சிவஞானவிபுத்வவிபுலம் ஸமாப்தம்.

திருச்சிற்றம்பலம்.

Q23:58:21114
149544

28